விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:– பன்னிரண்டு + IV

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 15 | செவ்வாய்க்கிழமை (01.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 317

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## சமாதானம் வேண்டிப் பிரார்த்திப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவோம்



### தீபாவளிச் செய்தியில் இந்துமத குருபீடாதிபதி வேண்டுகை

அசுரத்தனம் அழிந்து ஒளிமயமான வாழ்வியல் ஏற்பட்டதனை தீபாவளித் திருநாளாகக் கொண்டாடும் இந்நாளில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட இறைவனைப் பிரார்த்திப்பது இந்துக்களின் கடமையாகும்.

இவ்வாறு தீபாவளித் திருநாளையொட்டி சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக்குருக்கள் விடுத்த ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவுவது நம் அனைவரதும் தலையாய கட மையாகும்.

ஏழைகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி செய்யும் நோக்குடனேயே நம் முன்னோர்கள் திருநாட்களை வகுத்துக் கொண்டனர்.

சமகாலத்தில் திருநாட்களின் தாற்பரியங்களை நாம் மறந்துபோனாலும், தர்ம காரியங்களைச் செய்யும் வழக்கத்தை மீண்டும் எமது வாழ்க்கையில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் எம்மிடம் இருக்கின்ற வசதி வாய்ப்புக்கள் பெறுமதியுடையவையாகும். இவ்வாறு அந்த ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# யாழ்ப்பாணப் பொலிஸாரின் ஜீப் மீது நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல்!

## ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் ஜீப் மீது நேற்றிரவு 7 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர். திருநெல்வேலியில் இருந்து பலாலி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலியில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்துகொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பொலிஸ் வாகனம் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டை வீசிவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வாகனத்தில் இருந்த ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் யாழ். பொலிஸ் பிரிவைச் சேர்ந்த லலித் என்பவரே உயிரிழந்தவராவார். கே.டபிள்யு.குணவர்த்தன (வயது 33); ஆர்.பி.ஆரியதாஸ (வயது 45); ஏ.ஜே.சிறில் நிசாந்தகுமார (வயது 34) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா (12 ஆம் பக்கம் பார்க்க)




## வாழைச்சேனையில் இளைஞர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி கிரானில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் கிரான்வாசியான கந்தசாமி சசிக்குமார் (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இரவு உணவை முடித்துக்கொண்டு வீட்டில் இருந்த பொழுது அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் இவரை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த இளைஞர் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச–4)

## கண்காணிப்புக் குழு – எழிலன் சந்திப்பு

(திருகோணமலை)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 10 மணியளவில் திருகோணமலை சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் திருமலை மாவட் அரசியல்துறைப் பொறுப்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளில்லா வேவு விமானம் நேற்று வன்னியில் பறப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் ஆளில்லா வேவு விமானம் மீண்டும் நேற்று தனது வேவு நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளதாக விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளில் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக இவ் ஆளில்லா வேவு விமானம் வேவுப் பணிகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் தமிழ் நிர்வாகப் பகுதிகளில் ஆளில்லா வேவு விமானம் ஒன்று அண்மையில் விழுந்து நொருங்கியபோது வழமையான பயிற்சி நடவடிக்கைக்காகவே அனுப்பிவைக்கப்பட்டதென்று இராணுவத்தரப்பு தெரிவித்தது.

ஆனால் தமிழீழப்பகுதிகளில் வேவு பார்ப்பது யுத்தநிறுத்த மீறல் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கரு த்து வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீண்டும் வேவுவிமானம் பறந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ச–4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கேட்கும் வரம்தரும் கேதார கௌரி விரதம்

சிவசக்தி சொருபமாக இறைவனை வழிபடும் அருமையான



தொரு ஐதீகம் இந்து மதத்தவர்கட்கு உரியதொரு தனிச்சிறப்பாகும் திருமணத் தம்பதிகளைக் கூட பார்வதி பரமேஸ்வரனாகக் கருதிப் பெருமை கொள்பவர்கள் இந்து சமயத்தவராவர்.

கேதாரநாதர் சுயம்புலிங்கமாகத் தான்தோன்றீஸ்வராக இமயமலைச் சாரலிற் தோன்றியவராவார். கேதாரநாதரைத் தம்பதியாக வேண்டித் தவம் செய்து அனுட்டித்த விரதமாகையாலும் பார்வதியம்மையாருக்குக் கௌரி என்ற நாமமும் வழங்கிவருவதனாலும் தான் கேதாரகௌரி விரதம் என்ற பெயர் இவ்விரதத்திற்கு ஏற்பட்டதாகும்.

**புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தினமான (12.10.2005) புதன் கிழமை ஆரம்பித்து அனுஷ்டிக்கப்பட்டுவரும் இவ்விரதம் ஐப்பசி மாதம் தீபாவளி அமாவாசை தினமான இன்று நூல் எடுப்பதன் மூலம் நிறைவுறுகிறது.**

கேதாரம் என்றால் குளிர்மை எனவும் கௌரி என்றால் நல் ஒளியெனவும் பொருள்படுவதால் கேதார கௌரி விரதமும் வாழ்வில் கேட்கும் வரம் தந்து தன்னொளி வீசக் கூடியதாகும் எனலாம். இந்த விரதத்தினைக் காலங்காலமாகச் சுமங்கலிப் பெண்கள் அனுட்டித்து வருகின்றனர். புரட்டாதி மாதச் சுக்கிலபட்சதசமி முதல் ஐப்பசிமாத அமாவாசைத் தீபாவளி நாள்வரை இருபத்தொரு நாட்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பார்கள்.

கேதார கௌரி நோன்பு நாட்களிலே விரதம் அநுட்டிப்பவர்கள் சிவசக்தி சொருபமான அர்த்தநாரீஸ்வரப்பெருமானை வழிபடுவார்கள். இந்தக் கேதார கௌரி விரதம் எப்படி ஆரம்பமானதென்பதைப் பற்றி புராணங்கள் கூறுவதாவது,

சிவபிரானைத்தவிர வேறு தெய்வமில்லை எனச் சிவனையே முழு முதலாகத் தொழுபவரான பிருங்கி முனிவர் ஒருபோது சிவனைத் தரிசனம் செய்யக் கைலாயத்திற்கு சென்றபோது சிவனும் பார்வதியும் சேர்ந்திருக்கக்கண்டு சிவனை மட்டுமே தான் தரிசனம் செய்வேன் என்று ஒரு வண்டு உருவம் எடுத்து சிவனுக்கும்சக்திக்கும்இடையே நுழைந்து சிவனை மட்டுமே வழிபாடு செய்தாராம்.

பிருங்கி முனிவரின் இந்தச் செயலைக் கண்டு மனம் நொந்த அம்மையார் முனிவருக்குச் சாபம் கொடுக்கவும் அந்தச் சாபத்தினால் முனிவர் தமது கால்களின் சக்தியை இழந்து தள்ளாடி விழுந்தாராம். சிவபிரான் முனிவர் மீது இரக்கம் கொண்டு முனிவர் நடமாடக் கூடியதாக ஊன்றுகோலும் மூன்றாவதாக ஒரு காலையும் கொடுத்து உதவினார்.

இது கண்டதேவியார் எம்பிரானுக்குத் தொண்டர்பால் உள்ள கருணையைக் கண்டு வியந்து இனிமேலாவது சிவனை வணங்குவோர் சக்தியையும் சேர்த்து வணங்க வேண்டும் என நினைத்து கௌதம முனிவரிடம் முறையிடவும், கௌதம முனிவர் கேதார விரதத்தை அனுட்டிக்குமாறு கூறவும், அதன் படியே சிவனை வேண்டிநோற்ற விரதத்தினாலேயே சிவசக்தி சொருபமாக அர்த்தநாரீசுவரராகித் கேதார கௌரி விரதமனுட்டிப்போர்க்குப் பார்வதி பரமேஸ்வரனார் கேட்ட வரங்களைக் கொடுத்து அருள்புரிகின்றார்.

வாழ்க்கைச் சிறப்பினை நல்குவதான இந்தக் கேதார கௌரி விரதத்தை இருபத்தியொரு நாட்கள் விரதமனுட்டித்து. இருபத்தியொரு வெற்றிலை, பாக்குப் பழம், நிவேதனங்கள் வைத்து இருபத்தியொரு முடிச்சுக்கள் கொண்ட நூலினை சிவலிங்கத்திலோ அல்லது பூரண கும்பத்திலோ அன்றி அர்த்த நாரீஸ்வரர் பாதங்களிலோ வைத்துப் பூசனை செய்து கௌரிகாப்பு எனக் கௌரியம்மை எம்பிரானை நினைத்து இருந்த நோன்பு இதுவானதாற் கேதார கௌரி நோன்பானது என்பதை மனத்திலிருத்தி வழிபாடுகள் செய்து நாமும் வாழ்வில் வேண்டும் நல்வரங்களைப் பெற்று நல் வாழ்வு காண்போமாக. □

**நீர்வை மணி**

## சிறு விளம்பரம்

### உதவியாளர் தேவை

வைத்தியசாலையில் மருந்து தயாரிப்பு வேலை செய்வதற்கு உதவி ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர் மானிக்கலாம். வே.குகமூர்த்தி, கந்தையா வளவு, 259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/812)

### நினைவுத் தூபிக்கு நிதி ஒதுக்கீடு

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த வடமராட்சி கிழக்கு மக்களுக்கான நினைவுத்தூபியை அமைப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரால் பருத்தித்துறை பிரதேசசபையின் உப அலுவலகமாகிய மருதங்கேணி பிரதேச சபைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுனாமியின் போது உயிரிழந்த வடமராட்சி கிழக்கு மக்கள் அனைவருக்குமாக நினைவுத்தூபி ஒன்றினை மருதங்கேணி கடற்கரையில் கட்டுவதற்கு பிரதேசசபை ஏற்பாடு செய்துள்ளதாக இதன் செயலாளர் பசுபதி தெரிவித்துள்ளார். (த-23)

### மெய்கண்ட தேவர் குருபூசை

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப் பெறும் சந்தான குரவர்களுள் ஒரு வராகிய மெய்கண்ட தேவரின் குருபூசை நாளை முற்பகல் 8.30மணிக்கு கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தில் விசேட பூசையைத் தொடர்ந்து மெய்கண்ட தேவர் குறித்த சிறப்புரை இடம்பெறவுள்ளது.(அ-19)

## இராசிபலன்

**01.11.2005**
**(ஐப்பசி 15, செவ்வாய்க்கிழமை)**
**சித்திரை பி.ப.2.53 மணிவரை**
**சதுர்த்தசி கா.7.10 மணிவரை**
**சித்தம், அமாவாசை விரதம்**
**இராகுகாலம் 3.03 -04.33 மணிவரை**
**சுபநேரம் 10.33 - 12.03 மணிவரை**
**கேதார கௌரி விரதம்**
**தீபாவளி**

| | |
|---|---|
| மேடம் | தொழில் மந்தநிலை, எதிர்பாராத செலவு, பித்தரோகம், வீண்பகை. |
| இடபம் | நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், பெரியோர் ஆதரவு, நல்ல முயற்சி. |
| மிதுனம் | காரிய தாமதம், மனக்கிலேசம், எதிர் பாராத செலவு, தொழில் ம்ந்தநிலை. |
| கடகம் | செய்தொழில் முன்னேற்றம், நண்பர்கள் உதவி, தனலாபம், காரிய சித்தி. |
| சிங்கம் | அதிகாரம், தொழில் நன்மை, தூரதேச செய்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| கன்னி | பிரயாண கஷ்டம், முயற்சி தாமதம், சத்துரு பயம், ரோகநிலை. |
| துலாம் | கலகம், கௌரவக்குறைவு, பிரயாண பயம், காரிய தாமதம். |
| விருச்சிகம் | எடுத்த கருமம் கைகூடும், தேகநலம், கீர்த்தி, நல்ல வருமானம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, சத்துருஜெயம், உடல் நலம், முயற்சி கைகூடும். |
| மகரம் | சிறு வியாதி, நண்பர்கள் விரோதம், வியாபார நன்மை, நல்ல முயற்சி. |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, மனச்சோர்வு, காரிய தாமதம், உடல்நலக்குறைவு. |
| மீனம் | பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில் விருத்தி, உறவினர் உதவி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

# ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி? தீர்மானிப்பது கட்சிகள் அல்ல, பொதுமக்களே

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது குறித்து பல வகையான ஊகங்களும், அனுமானங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

பல அமைப்புகளும், கட்சிகளும் கருத்துக்கணிப்பு போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றன.

11 வேட்பாளர்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் உண்மையான போட்டி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையே தான் என பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுஸில் பிறேமஜெயந் தமது வேட்பாளர் மஹிந்தராஜபக்ஷவே, ஜனாதிபதியாக வருவார் என்று செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த செவ்வியில் மேலும் குறிப்பிட்டதாவது,

எமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தருணத்தில் கடந்த பொதுத் தேர்தலின் போது எமக்கு சாதகமான வாக்கு எண்ணிக்கைகளை கவனத்தில் எடுக்கும் போது 45.6 வீதமானவை கிடைத்தன. ஜாதிக ஹெல உறுமயவிற்கு நூற்றுக்கு 51.98 சதவீதமான வாக்குகளில் கணிசமானவை எமக்குக் கிடைக்கும். அதனை கிராம மட்டத் தில் எம்மால் உணரமுடிந்தது. இந்த இரண்டு எண்ணிக்கைகளும் இணையும்போது நூற்றுக்கு 50 சதவீதம் வரை எம்மால் எட்டமுடியும்.

இதுதவிர இந்த நாட்டின் முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக தமிழ் மக்கள் எமக்கு ஆதரவு வழங்காத போதும் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கும் ஆதரவு அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில் 52 சதவீதமான வாக்குகளைப் பெறலாம் என்ற முறையிலேயே எமது பிரசாரங்களை நாம் முன்னெடுத்துச் செல்கிறோம்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே அதிக வாய்ப்பிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

சென்ற பொதுத் தேர்தலில் தாம் தோல்வியடைந்த போதிலும் எம்முடன் இணைந்துள்ள மலையகம் வடக்கு, கிழக்கு மற்றும் முஸ்லிம் மக்கள் ஆகியோரினுடைய வாக்குகளுடன் எமக்கு 48.23 வாக்குகள் கிடைத்தன.

இதனுடன் 50 சதவீதத்தைப் பெறுவதற்கு மேலதிகமாக 3 இலட்சம் வாக்குகளை மட்டுமே பெறவேண்டும். அந்த வாக்குகளை எமது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பெற்று வெற்றியைப் பெறுவார். தற்சமயம் ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் கிராம மட்டத்தில் உடைந்த நிலையிலுள்ளன.

இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஆகக்குறைந்தது 53 சதவீதத்தால் வெற்றிபெறுவது உறுதி என்றார்.

ஒவ்வொரு கட்சியும் தத்தமது வேட்பாளருக்கே வெற்றி எனக் கூறி வந்தாலும், இத் தேர்தலில் வாக்களிக்கப் போகும் பொதுமக்கள் எவ்வித கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்து வருகிறார்கள். மக்களது மனநிலை அறியாது வெறும் புள்ளிவிபரக் கணக்கை மாத்திரம் வைத்துக்கொண்டு தங்களுக்குத் தான் வெற்றி என ஒவ்வொரு கட்சியும் தம் பட்டமடிப்பது ஆச்சரியமாக இருக்கின்றதென அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள். (து-9)

## மீடின் கொலை விசாரணை துரிதகதியில் இடம்பெறுகிறது

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் உயர் அதிகாரியான லெப்.கேணல் மீடின் கொலை செய்யப்படுவதற்கு முன்பாக அவரின் வீட்டுக்கு வந்து அவரை அழைத்துச் சென்றவரைத் தேடும் நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளார்கள். அழைத்துச் செல்லப்பட்ட விடயம் தொடர்பாக பல பிரிவுகள் ஊடாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் பற்றிய பல முக்கிய தகவல்கள் கிடைத்திருப்பதாகவும், பலர் விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் இந்த விசாரணைகள் மூலம் அதிகாரி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகும் போது இருவர் அவருடன் இருந்ததாகவும் தெரியவருகின்றது. (த-8)

## சகல இனத்தவரையும் பாதுகாக்கும் ஒரேயொரு தலைவர் மஹிந்தவே

பிரதமர் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதென்று முற்போக்கு முஸ்லிம் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பிரதமர் மஹிந்தவை அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே முன்னணி இவ்வாறு தெரிவித்ளது.

முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் முஸ்லிம்கள் பிரதமர் மஹிந்தவுகது வாக்குகளை அளிக்க வேண்டும். அவர் தான் முஸ்லிம்களின் உரிமையைக் கொடுப்பார்.

ஈராக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லிம்களுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது பிரதமர் மஹிந்த அவர்களின் உரிமைகளுக்கு ஆதரவு தெரிவித்தார். இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது முஸ்லிம் மக்கள்அடங்கலாக சகல சமூகத்தவர்களையும் பாதுகாக்கக்கூடிய ஒரேயொரு தலைவர் மஹிந்த தான். எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் முற்போக்கு முன்னணி முஸ்லிம் விடுதலை மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கவுள்ளது. (த-8)


**வாசிப்பு மாதம்**

**வாசியுங்கள் அகவிழி திறக்கும்**
**வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!**

**காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுனில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.**

**(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)**

தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.
தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
**அகவிழி**
ஆசிரியத்துவநோக்கு...

C-அ-1755

# இன்று ஒரு தகவல்

## பெருங்கருணை நாச்சியார்

நந்திவர்மன் காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். அது எப்படி எனக்குத் தெரியும் என்று நினைக்கிறீர்களா? கல்வெட்டில் இருக்கிறது. நந்திக்கலம்பகத்தினால் புகழ் பெற்றவன் மூன்றாம் நந்திவர்மன். அவன் ஆண்ட இடம் தெள்ளாறு. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று அவனைச் சொல்வார்கள்.

அந்தக் காலத்தில் அந்த ஊரில் ஒரு தேர்தல் நடந்தது. ஊராட்சித்தேர்தல். அந்தத் தேர்தலில் அந்த ஊருக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு பெண்மணி. அவருக்குப் ''பெருங்கருணை'' என்று பெயர். அந்தப் பெண்தான் ஊராட்சி மன்றத் தலைவி. ஒரு நாள் மாலை அந்த ஊரில் சில பெண்கள் குளத்துக்குப் போய் குடிநீர் எடுத்துக் கொண்டு இடுப்பில் குடத்துடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

வழியில் ஒரு ஆள் குடித்துவிட்டு அவர்களிடம் வம்பு செய்தான். அந்தப் பெண்களைப் பற்றி அவதூறான வார்த்தைகளைப் பேசியிருக்கிறான். உடனே அந்தப் பெண்கள் ஊராட்சிமன்றத் தலைவியிடம் போய் புகாரிட்டனர். அந்தத் தலைவி அது தான் பெருங்கருணை உடனே வம்பு செய்த ஆசாமி யாரென்று விசாரித்துப் பார்த்தார். அதுவேறுயாருமல்ல தனது கணவன் தான் என்று புரிந்தது. தவறு செய்தது தனது கணவன் தான் என்பதனால் நீதி தவறிவிடமுடியுமா?

மறுநாள் ஊர்க்கூட்டம் நடந்தது. கிராம மன்றத்தில் அந்தக்குற்றவாளி விசாரிக்கப்படுகிறான். விசாரிப்பது மனைவி. பதில் சொல்வது கணவன். இருந்தாலும் தீர்ப்பு என்ன தெரியுமா? இந்த ஊரில் உள்ள திருமூலட்டானேஸ்வரர் கோவிலுக்கு சில பசுக்களைத் தானமாகக் கொடுக்கவேண்டும். இன்னும் சில பொருட்களையும் தானமாகக் கொடுக்கவேண்டும். ஒரு மண்டலம் வரை அதாவது 48 நாட்கள் வரை தினமும் பொழுது விடிவதற்கு முன்னால் கோவிலுக்குப் போய் முன்புறத்தை சுத்தம் செய்ய வேண்டும். மெழுகவேண்டும். பூமாலை கட்டவேண்டும். அகல்விளக்குகளை ஏற்றி வைக்கவேண்டும். இதுதான் தீர்ப்பு. கூட்டம் முடிந்தது.

மறுநாள் காலை பொழுது விடிவதற்கு முன்பு அந்தக் கோவில் பக்கம் என்ன நடந்துகொண்டிருந் தது தெரியுமா? தீர்ப்பு வழங்கிய அந்தக் கிராமத் தலைவி பெருங்கருணை அம்மையாரே கோயிலுக்கு முன்பக்கம் மெழுகி சுத்தப்படுத்தி பூமாலைகட்டி அகல் விளக்கேற்றினார். தினமும் இதே மாதிரி செய்து கொண்டிருந்தார். ஊர் மக்களுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சிலர் நேரிலேயே கேட்டார்கள். ''ஏனம்மா! தண்டனை அடைந்தது உனது கணவன். அவன் செய்ய வேண்டிய வேலையைத் தீர்ப்பு வழங்கிய நீ செய்து கொண்டிருக்கிறாயே இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டார்கள்.

இதற்கு அந்த அம்மா பதில் சொன்னார். ''குற்றம் செய்தவருக்கு குற்றத்திற்குரிய தண்டனையைக் கொடுத்தேன். இந்த ஊருக்குத் தலைவி என்ற முறையில் அதைச் செய்தேன். இப்போது மனைவி என்ற முறையில் அவரது துன்பத்தில் பங்கேற்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அந்தக் கடமையைத்தான் இப்போது நான் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன்''. இதுதான் அந்த அம்மா சொன்ன விளக்கம்.

தனது கணவனே ஆனாலும் குடிமயக்கத்தில் ஊர்ப் பெண்களைத் துன்புறுத்தியதற்கு உரிய தண்டனையைக கொடுத்த செயலுக்காகப் பெருங்கருணை அமமையாரை அந்த ஊர்மக்கள் ''குடிக்குறை துடைத்த நாச்சியார்'' என்று கல்வெட்டில் பொறித்து வைத்திருக்கிறார்கள். இந்தக் காலத்திலும் இதுபோல் சிலருண்டு. இந்தக் காலத்து இல்லத் தலைவி ஒருவர் மிகவும் சோகமாக இருந்தார். 'என்ன விசயம்?' என்று விசாரித் தேன். எனது கணவன் என்ன தப்புசெய்தாலும் உடனே தண்டனை கொடுத்துவிடுவேன்.கொடுத்த பின்பு அந்தத் தண்டனையை அனுபவிக்கப்போவது எனது கணவரே என்று நினைத்துக் கவலைப்படுவேன்'' என்றார்.

''என்ன மாதிரி தண்டனை கொடுப்பீர்கள்?'' என்று கேட்டேன். பெரிதாக ஒன்றுமில்லை அவர் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் ஒவ்வொருவேளை சாப்பாடு கிடையாது அவ்வளவுதான். இப்போது கூட அந்தத் தண்டனைதான் கொடுத்துவிட்டு வருகிறேன். அதுதான் கஷ்டமாக இருக்கிறது என்றார். ''இதற்காகவா இவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள்? என்றேன். அவர் சாப்பிட்டு இன்றோடு 25 நாள் ஆகிறது அதுதான் கவலையாக இருக்கிறது'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மங்கள சமரவீரவுக்கு எதிராகப் போராடுவதற்கு பிக்குகளைத் திரட்டுகிறார் தம்மாலோக தேரர்

(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீரவின் அவதூறுகளைக் கண்டித்து போராட்டம் நடத்துவதற்காக புத்த பிக்குகளை ஒன்று திரட்ட உடுவே தம்மாலோக தேரர் முடிவு செய்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத்தெவித்த தம்மாலோக தேரர், மங்கள சமரவீரவின் அவதூறுகள் பிக்குகளையும் பௌத்த சாசனத்தையும் அவமதிக்கும் வகையில் உள்ளதாகத் தெரிவித்தார்.

தமக்கு அமைச்சுப்பதவி வழங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு மறுத்ததாகவும் அமைச்சுப்பொறுப்பை அளிக்க ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டதால்த்தான் அவரை ஆதரிப்பதாகவும் சில ஊடகங்கள் பொய்ச்செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஆனால் இது போன்ற எந்தவொரு நிபந்தனையும் ரணிலுக்கும் எமக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை என்றும் தம்மாலோக தேரர் தெரிவித்தார். ஜாதிகஹெல உறுமயவினரின் மத மாற்றத் தடைச் சட்டத்தை எதிர்ப்பதாகவும் இச் சட்டத்தை அனைத்து மதத்தலைவர்களினது ஒப்புதலுடன்தான் நிறைவேற்றவேண்டும் என்றும் தம்மாலோக தேரர் மேலும் தெரிவித்தார். (த-4)

# சுனாமி நிவாரணப் பொருட்களை தீயிட்டு அழிக்கிறது அரசாங்கம்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை அரசாங்கம் தீயிட்டு அழிப்பதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தினரால் வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் உணவுப்பொருட்கள் போன்ற ஆழிப்பேரலை நிவாரணப்பொருட்களை அரசாங்கம் பாதிக்கப்பட்டோருக்கு விநியோகிக்கவில்லை. கடந்த பத்துமாதங்களாக அரசாங்கக் கிடங்குகளில் இவை முடங்கியுள்ளன.

விநியோகிக்கப்படாத பொருட்களை தீயிட்டு அழிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியமைத்தால் இது தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

அம்பலாந்தோட்டை, மொனறாகல, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்கள் வைத்திருக்கும் கிடங்குகளில் அண்மைக்காலமாக அடிக்கடி தீ விபத்துக்கள் நடைபெறுகின்றன. பாவனைக்குரிய நாட்கள் கடந்து விட்ட நிலையில் மருந்துப்பொருட்களை அழித்துவருவதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துவருகின்றனர். நிவாரணப்பொருட்கள் தொடர்பில் முறையாக கோப்புக்களை அரசாங்க அதிகாரிகள் கையாள்வதில்லை.

அண்மையில் கணக்குத்தணிக்கை அதிகாரி 13.5 வீதமான நிதி உதவிமட்டுமே வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருந்ததை உறுதிப்படுத்தும் விதமாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் உள்ளன. இப்படியான பொறுப்பற்ற செயற்பாடுகளை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டால் எந்தவொரு உதவி வழங்கும் அமைப்போ,நாடோ எமக்கு உதவிகளை வழங்காது என அவர் தெரிவித்தார். (த-4)

# ஆயுதக்குழுக்களை வெளியேற்ற வேண்டும்

## க.கா.குழுவின் பரிந்துரையை ஏற்றது கௌசல்யன் மரண விசாரணைக் குழு

(கொழும்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களை வடக்கு -கிழக்குப் பகுதிகளில் அனுமதிக்கக்கூடாது. அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்த பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப்பட்டது.

இக் குழுவின் விசாரணை அறிக்கைகள் கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டன. அதில் ஆயுதக் குழுக்களை களைவது தெடார்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்புத் தலைவர் ஸ்டீன் ஜோர்ஜென்சென் தெரிவித்திருந்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் இக்குழு எதுவித குறிப்பிடத்தக்க பரிந்துரைகளையும் ஜனாதிபதிக்கு அளிக்கவில்லை.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினரால் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவ் இராணுவத்தை இயக்குகின்ற ஜனாதிபதி அமைத்துள்ள ஆணைக்குழுவிடம் நீதியான விசாரணையை எதிர்பார்க்க முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் ஆணைக் குழுவை நிராகரித்திருந்தனர்.

அதேபோல் மட்டக்களப்பு, அம்பாறை தமிழ் மக்களும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை புறக்கணித்தனர்.

இதனால் கௌசல்யன் கொலை தொடர்பாக இராணுவத்தரப்பு மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரது கருத்துக்களை மட்டுமே ஆணைக் குழுவால் பெறமுடிந்தது.

இதைச் சுட்டிக்காட்டும் ஆணைக்குழு[illegible] வட்டாரங்கள், இக்காரணங்களால் எம்மால் உறுதியான எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இரு தரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்க வேண்டும். இரு தரப்பினரும் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்ற பொதுவான பரிந்துரைகளையே அவ் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (த-4)

## ஸ்ரீ.சு.கட்சியின்

# கொள்கைகளைக் காட்டிக் கொடுக்க மஹிந்தவுக்கு உரிமை இல்லை



(கொழும்பு)

''இராணுவம் இல்லை என்றால் இன்று நாடு என்ற ஒன்று இருந்திருக்கமாட்டாது'' என வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார மேடைகளில் சில இராணுவத்தை கலைத்து இராணுவத்தினரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் கூறி வருவதைக் குறிப்பிட்டு வருத்தம் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். நிட்டம்புவவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விதமாக வெளிவரும் செய்திகள் மக்கள் குழப்பமடைய காரணமாக அமைந்துள்ளது என்றும் கூறினார்.சிலர் படையினரின் சீருடையை களற்ற வேண்டும் என மேடைகளில் கூறுகின்றனர். இராணுவம் இல்லை என்றால் இலங்கை இல்லை. இராணுவம் இல்லை என்றால் இன்று தலைவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள்.

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு துரோகம் செய்ய எவருக்கும் உரிமை இல்லை. எமது கட்சியை ஒரு போதும் ஏலத்தில் விடவும் தயார் இல்லை.'' 'பிரதமர் மஹிந்தவுக்கு எவருடனும் உடன் படிக்கை செய்ய உரிமை உள்ளது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையை காட்டிக் கொடுக்க அவருக்கு உரிமை இல்லை. அந்த உரிமை ஜனாதி பதிக்கும் இல்லை.சுதந்திரக் கட்சி எனது தந்தையின் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்ட ஒன்று. மக்களின் கண்ணீரால், வியர்வையால், உழைப்பால் மக்களின் உழைப்பில் பாதுகாக்கப்பட்ட ஒன்று'. இறுதி பண்டாரநாயக்க என்ற ரீதியிலேயே இதனைப் பகருகின்றேன்.எனக்குப் பிறகு பண்டாரநாயக்கர்கள் அரசியல் செய்யப்போவதில்லை. பண்டாரநாயக்கர்களில் இனி அரசியல் செய்ய எவரும் இல்லை.

அடிப்படை தீவிரவாதத்திற்கு தலைசாய்க்காமல் இந்த நாட்டின் சிறுபன்மை மக்களின் பிரச்சினையை தீர்க்கவேண்டும். வாக்கைப் பெறுவது என்பது ஒன்று. நாட்டை நிர்வகிப்பது என்பது வேறொன்று. இரண்டும் வெவ்வேறானவை என்பதை புரிந்துகொள்ளவேண்டும் என அவர் மேலும் கூறினார். (த-8)

# கிறிஸ்தவ மாணவிகளின் தலை துண்டிப்பு
## இந்தோனேசியாவில் பயங்கரம்

இந்தோனிசியாவில் மர்ம நபுர்கள் மூன்று கிறிஸ்தவ மாணவிகளின் தலையைத் துண்டித்து படுகொலை செய்துள்ளனர். இச்சம்பவத்தையடுத்து இந்தோனேசியாவில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் கிழக்கில் சுலாவாசி தீவில் உள்ள போசோ நகரில் நேற்று முன்தினம் பள்ளிக்கு சென்றுகொண்டிருந்த நான்கு மாணவிகளின் தலையை, கறுப்பு உடையில் வந்த மர்ம நபர்கள் கத்தியால் சீவினர்.

இதில் மூன்று மாணவிகள் தலை துண்டிக்கப்பட்டு துடிதுடித்து பரிதாபமாக இறந்தனர்.

ஒரு மாணவி கத்திக்குத்து காயங்களுடன் உயிர்தப்பினார்.

தலை துண்டிக்கப்பட்ட மாணவிகளின் உடல்கள் சம்பவ இடத்தில் கிடத்தன. வெவ்வேறு இடங்களில் கிடந்த மூன்று மாணவிகளின் தலைகளையும் இரண்டு மணி நேரத்துக்கு பின் மக்கள் கண்டெடுத்தனர்.

படுகொலை செய்யப்பட்ட மாணவிகளும் 16 முதல் 19வயதுக்குட்பட்ட கிறிஸ்தவர்கள் சுலாவாசியில் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே அடிக்கடி நடந்துவரும் மோதல் கடந்த 98ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



சீனாவை சேர்ந்த கலைக்குழுவினர் நடத்தி வரும் கலை நிகழ்ச்சி இது. சீனாவில் உடல் ஊனமுற்றவர்கள் இணைந்து ஒரு நடனக் குழுவை அமைத்துள்ளனர். இவர்கள் இப்போது ஜப்பானில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்கள். நகோயா நகரில் இவர்கள் ஒருவர் பின் ஒருவராக நின்று மலர் விரிவது போல நடனம் ஆடிய காட்சி.

# புஷ்-ரொனி பிளேயர் கடும் கண்டனம்

(வாஷிங்டன்)

டெல்லி தொடர் குண்டுவெடிப்பு சம்பவம் உலக தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த வெடிகுண்டுத் தாக்குதலைக் கண்டித்து அவர்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இந்தச் சம்பவம் மிகவும் கொடுமையானது. தீவிரவாதத்தை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்த நாசக்காரர்களைக் கண்டுபிடித்து அவர்கள் நீதியின் முன் நிறுத்தப் பட வேண் டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயர் இந்த குண்டு வெடிப்பில் பலியானவர்கள் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தீவிரவாதம் இன்னும் தலைவிரித்து ஆடுகிறது என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காட்டுமிராண்டித்தனமான செயல் என்று பல்வேறு நாட்டுத் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். பாகிஸ்தான்,பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை மந்திரிகளும் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.தென் ஆபிரிக்க அதிபர் தபோ மெபேகி ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு இந்தக் குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார். (ற)

WORLD NEWS
உலக தரிசனம்



ஜப்பானில் ‘எடோ’ கால கட்டத்தை நினைவு கூரும் வகையில் விழா நடக்கிறது. டோக்கியோவில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் எடோ கடவுளை தேரில் வைத்து பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். இந்த ஊர்வலத்தில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



தாய்லாந்து பட்டாயா சுற்றுலா ஹொட்டலில் நடந்த ‘மிஸ் இன்டர்நேஷனல் குயின்’ போட்டியில் பட்டத்தை வென்ற மிமி மார்க்ஸ் வெற்றிக் களிப்பில் கோப்பையுடன் போஸ் கொடுக்கிறார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இப் போட்டி ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர்களுக்கு மட்டும் நடத்தப்பட்டது.

# தீவிரவாதிகளுக்கு எதிரான தீர்ப்பே
## குண்டுவெடிப்புக்களுக்கு காரணம்

டில்லியில் 12 இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு பாகிஸ்தான் ஆதரவு இயக்கமான லஷ்கர் -இ- தொய்பா தீவிரவாத அமைப்பே காரணம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டில்லி செங்கோட்டையை தகர்த்த லஷ்கர்-இ- தொய்பா தீவிரவாத இயக்கத்தினர் முயன்றனர். இதில் 3 பேர் பலியானார்கள். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட 11 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு டில்லி கூடுதல் செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்றுவந்தது. கடந்த 24ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் ஒரு பாகிஸ்தான் தீவிரவாதி மற்றும் 6 இந்தியர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு கூறப்பட்டது. 4பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்ட 7 பேருக்கும் கடந்த சனிக்கிழமை தண்டனை வழங்கப்படுவதாக இருந்தது.

இதை அறியாத தீவிரவாதிகள் தங்கள் கூட்டாளிகளுக்கு தண்டனை கிடைக்கப் போகிறது என்ற ஆத்திரத்தில் திட்டமிட்டு வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியிருப்பது தற்போது தெரியவந்துள்ளது. (ற)

# மசூதியில் குண்டுவெடித்து 26பேர் பலி

ஷியா முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் ஈராக்கில் பக்தாத் நகருக்கு வடக்கேயுள்ள அடிகல் என்ற நகரத்தில் ஒரு மசூதியில் ஏராளமானவர்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்த போது வெடிகுண்டு நிரப்பப்பட்ட காரொன்று வெடித்ததால் 26 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 40க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். மசூதியும் ஏராளமான கடைகளும் குண்டுவெடிப்பில் சேதமடைந்தன. (து)



ஆந்திர மாநிலத்தில் புயல், மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், ஆற்றின் மீது அமைக்கப்பட்டிருந்த ரயில்வே பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. ஆற்றில் விழுந்த ரெயில் பெட்டிகளை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# டில்லியில் குண்டுவெடிப்பு
## 22 பேரிடம் பொலிஸார் விசாரணை

டில்லி குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக 22 பேரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

குண்டுவெடிப்புகளுக்குக் காரணமான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க டில்லி பொலிஸார் தீவிர தேர்தல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் மற்றும் உளவுத் துறையினர் 22பேரிடம் துருவித்துருவி விசாரித்து வருகின்றனர்.

குண்டுவெடிப்புச் சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் குறித்து துப்பு தருவோருக்கு ரூ.1 இலட்சம் வெகுமதி அளிக்கப்படும் என்றும் அவர்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்படும் என்று நிருபர்களிடம் டில்லிப் பொலிஸ் கமிஷனர் கே.கே. பால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறினார். டில்லியில் மெட்ரோ ரயில், ரயில்வே நிலையங்கள், விமான நிலையம் மற்றும் மக்கள் கூட்டம் நிறைந்த மார்க்கெட் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் முக்கியமான மார்க்கெட் பகுதிகளில் மணல் மூட்டை அடுக்கப்பட்டு மெட்டல் டிடெக்ரர்களும் வைத்து சோதனை நடத்தப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

சனிக்கிழமை நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 61ஆக உயர்ந்துள்ளது. குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 188பேர் காயமடைந்தனர். (து)

# ரிஸ்வி மீடினின் படுகொலைக்கு ஜே.வி.பியே பொறுப்பேற்க வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரி ரிஸ்வி மட்டினின் படுகொலைக்கு ஜே.வி.பி தான் பொறுப்பேற்றக வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலனாய்வுத்துறை அதிகாரி ரிஸவி மீடின் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டினின் படுகொலையை நாம் கண்டிக்கிறோம். அவர் ஒரு திறமையான அதிகாரி லெப். கேணல் முத்தலிப் மற்றும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர்ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட போது அந்தப் படுகொலை எவ்வாறு நிகழ்ந்தது? அதற்குக் காரணமாக இருந்த பாதுகாப்பு குறை பாடுகள் என்னவென்பதைக் கண்டறிவதறகாகக் குழுவை நியமிக்குமாறு அரசாங்கத்துக்கு நாம் வேண்டு கோள்விடுத்தோம்.

அன்று அந்தக் குழுவை நியமித்திருந்தால் மீடினுக்கு இந்நிலை ஏற்பட்டிருக்காது.

ஆனால்,குழுவை நான் நியமிக்குமாறு கோரிககை விடுத்த போது ஜே.வி. பியின சோமவன்ஸ அமரசிங்கவும், விமல் வீரவனஸவும் நாம் விடுதலைப் புலிகள் மீது சுண்ணாம்பு பூச முயல்வதாகக் கூறி அந்தக்குழு நியமிக்கப்படுவதைத தடுத்துவிட்டனர். அதனால் மீடினின் படுகொலைக்கும் அதற்குக் காரணமாக இருந்த பாதுகாப்பு குறைபாடுகளுக்குமான பொறுப்பினை ஜே.வி. பியினரே ஏற்கவேண்டும்.

இத்தகைய படுகொலைகள் நிகழ்கையில் அவை விடு தலைப் புலிகளினால் மேற்கொள்ளப் படடவை எனக் குற்றம் சாட்டி அதனை கண்டிப்பதும் மட்டும் போதுமானதல்ல.தனது பாதுகாவலர்கள் இன்றி நண்பர்களுடன் கிரிபத்கொடையில் உள்ள உணவகம் ஒன்றுக்கு சென்று திரும்புகையிலேயே மீடின் கொல்லப்பட்டுள்ளார். என விசாரணையில் தெரியவந்துள்ளது.

அன்று அக்குழு நியமிக்கப் பட்டிருக்குமானால் இத்தகைய பாதுகாப்பற்ற பயணங்கள் தவிர்க்கப் பட்டிருக்கும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை பாதுகாக்கப்படவேண்டுமா அல்லது அதனை இரத்துச்செய்ய வேண்டுமா என்பது பற்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை. இது போன்ற படுகொலைகளை நிறுத்துவது எப்படி என்று அவர் இதுவரை எதனையும அறிவிக்கவில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவோ திருத்தவோ தேவை யில்லை. செய்யவேண்டியது யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவைப் பலப்படுத்துவது தான். கிழக்கில் இருக்கும் பொலிஸாருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் விசேட பயிற்சிகளை வழங்கி அந்த அமைப்புக்க்ளைப் பலப்படுத்த வேண்டும்.

படுகொலைகளை மேற்கொளளும் குழுக்கள் பற்றி ஆராய்வதற்காக புதிய பிரிவு ஏற்படுத்தப் படவேண்டும் என்று ஜனாதிபதி சநதிரிகாவிடம் கோரியிருந்தோம். இவற்றை நிறைவேற்றுவதாக சந்திரிகாவும் தெரிவித்தார்.

புலனாய்வுப்பிரிவினர் முக் கிய பிரமுகர்கள், கிழக்கில் விடுதலைப் புலிகள், கருணா குழுவினர் ஆகியோர் படுகொலை செய்யப் படும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நாம் சில திட்டங்களை முனவைக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

# இசைத்தட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி இந்து இளைஞர் மன்றத்தின் நீர்வைக்கந்தன் பாமாலை இசைத்தட்டு வெளியட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் சங்க கட்டபத்தில மன்றத்தலைவர் [illegible] கோபிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுணகலைப்பீட இசைத்துறை தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியர் ச.லலீசன்,கொழும்பு அரச அச்சக உத்தியோகத்தர் ச. சண்முகப்பிரபா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனா.

மதிப்பீட்டு உரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் தொடர்ந்து வரவேற்புரையை மன்றத்தின் உப தலைவா தி.கஜனும் ஆசியுரையை சவசிறி இராசேந்திர சுவாமிநாதக் குருககளும் வெளியட்டுரையை நிர்வாகசபை உறுப்பினர் சி.சுரேந்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இவ் இசைத்தட்டின் முதற் பிரதியை யாழ்.வினோ நகைப்பூங்கா உரிமையாளர் ச.புவிச்சந்திரனும் கௌரவப் பரதியை சூரிய கட்டட அலங்காரப் பொருட்கள் விற்பனையாளரும் ஒப்பநதக்காரருமான சு.உதயசங்கரும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (அ-19)

# 50 கி. மீற்றருக்கப்பால் வாக்களிப்பு நிலையம் பவ்ரல் அமைப்பிடம் விடுதலைப்புலிகள் விசனம்

(கொழும்ப)

ஜனாதிபதி தேர்தலுக்காக தங்கள் வாழ்விடங்களிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்திற்குச் சென்று தமிழர்களை வாக்களிக்கச செய்துள்ள அரசாங்கத தின செயற்பாடுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விசனம் வெளியிட்டுள்ளனர் என பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்கிஸ்லி ஹொட்றிகோ தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் வைத்து பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடகிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் தலைவர்கள் தேர்தல் பரப்புரைகளுக்கு அனுமதிக்கப்படுவது தொடர்பாகவும், தமிழ் மக்கள் வாக்களிப்பது தொடர்பாகவும் இச் சந்திப்பில் விவாதிக்கப் பட்டன.

அரசியல் தலைவர்களை தோதல் பரப்புரை பயணத்திற்கு அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழச் செல்வனிடம் கேட்டுக் கொண்டோம் அதற்கு பதிலளித்த தமிழ்ச்செல்வன் அரசியல் தலைவர்கள் எம்மிடம் அனுமதி கேட்டால் நாம் அதை எதிர்க்கமாட்டோம்.ஆனால் அவர்களது தோதல் பரப்புரைகளுக்கு நாங்கள இணக்கம் தெரிவிக்க வில்லை என்று அவர்கள் எண்ணிக்கொண்டு உள்ளனர் அது தவறானது என்று தெரிவித்தார்.

கொசாவா, கிழக்கு தீமோர் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் ஆபத்தான பகுதிகளில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ்த்தான் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஆனால் இலங்கையில் மட்டும் தமிழர் தாயகப்பகுதிகளில் தேர் தலை நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தை ஐரோப்பிய ஒன்றி யமோ ஐக்கிய நாடுகள் சபை யோ கேட்டுக்கொள்ளவில்லை. எமது மக்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கான 50 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்வது என்பதை எம்மால் கற்பனை செய்து பார்க்க இயாலது என்றும் தமிழ்ச்செலவன் எமது குழுவிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துக்களை தேர்தல் ஆணையாளரிடம தெரிவித்துள்ளோம். இருப்பினும் தமிழீழ பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைத்து தமிழர்களை வாக்களிக்கச் செய்யும நடவடிக்கையானது மிகத் தாமதமானது என கிங்ஸிலின் நொட்டிக்கோ மேலும் தெரிவித்தார்.(4)


அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

குளிரூட்டிய நவீன மயப்படுத்தப்பட்ட




SRI PALM BEACH




Restaurant

கீழைத்தேச, மேலைத்தேச சுவை மிக்க தரமான உணவு வகைகள்

| | |
|---|---|
| Chicken "65" | சிக்கன் "65" |
| Mutton Buriyni | ஆட்டுப் புரியாணி |
| Cicken Buriyni | கோழிப் புரியாணி |
| Fish meal | மீன் சாப்பாடு |
| Chetinad Chicken | செட்டிநாடு சிக்கன் |
| Fried Rice Chicken | சிக்கன் பிரைட் றைஸ் |
| Fried Rice sea Food | கடலுணவு பிரைட் றைஸ் |
| Noodles mutton | மட்டன் நூடுல்ஸ் |
| Chilly Chicken | சில்லி சிக்கன் |



உண்டு மகிழ்ந்திட ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

*Note:*

EARLY and Advance Payable Booking for Pizza (Veg/Non Veg)

Orders and party orders will Acceptable

Tel: 021-222 6634

Hot Line 077-722 2180, 077-667 5045, 077-728 3595



Sri Palm Beach Restaurant (A/C)
(Veg.& Non Veg. Restaurant)
Raja Theatre Complex
205, Kasturiar Road, Jaffna.

# தீபாவளி சிறப்பு மலர் - 2005


அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!



குறித்த தவணையில் ஓடர் நகைகளை தரமான 22 கரட் தங்க நகைகளில் செய்துதர யாழ்.நகரில் நம்பிக்கையான நகைமாடம்

மைதிலி நகைமாடம்

MAITHELY NAGAI MAADAM

39v, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7902, 077 6092154

புத்தம் புது டிசைன்களில் குறித்த தவணையில் தரமாக செய்து தர

YARL MAITHLY JEWELLERS

யாழ் மைதிலி ஜுவலர்ஸ் Tel:- 011-2396239, 077- 6092154

157, Sea Street, Colombo - 11

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

அன்றும்! இன்றும்!! என்றும்!!!



இதமான புகை இன்பத்திற்கு ஆர்.வி.ஜி.பீடிகள்

ஆர்.வி.ஜி.பீடி ஸ்தாபனம்

இல-58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 - 222 6806

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து பால்மா வகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

R.V.G. மெடிக்கல்ஸ்

இல-504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 021- 222 2129

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்களது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!





நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் தரம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில் சிறந்த ஸ்தாபனம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone / fax:- 021- 222 2824

அனைவருக்கும் எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

ரூபா பன்முக வர்த்தகம்

இல-104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2479

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

★ சகலவிதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருட்கள்

★ கைத்தொழில் மூலப்பொருள்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துச்சரக்குகள், அறோவ்ட் மா ஆகிய அனைத்தையும் பெற்றிட



ஸ்ரீகாந்த் எசன்ஸ் அன் குறோசரீஸ்

இல.161, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். No.161 K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 2219

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

இலங்கை வங்கி ரண் கூரெக்கும்

அடகுச் சேவையின் சிறப்பு அம்சங்கள்

- ஒரு தங்கப் பவுணுக்கு ஆகக் கூடிய தொகை.
- குறைந்த வட்டியில் உபசரிப்புடன் கூடிய உடனடிச் சேவை.
- கொடுக்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை, கொடுக்கல் வாங்கல்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்.
- அடகு வைக்கப்படும் பொருட்களுக்கு அதி கூடிய பாதுகாப்பு.
- நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள், ஏற்றுக்கொள்ளத்தக்க தரமதிப்பீடு, தங்க ஆபரணங்களின் தரத்தை தவறின்றி பரீட்சித்தலும், மதிப்பிடுதலும்.
- கணனிமயப்படுத்தப்பட்ட கிளைகளில் பகுதி பகுதியாக பணத்தை மீளச் செலுத்துவதற்கான வாய்ப்பு.
- தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் போது, சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கவும், பணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்கொண்டு அடைவை மீட்டுக் கொள்வதற்குமான வாய்ப்பு.
- அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- தொடர்ந்தும் தங்கள் விருப்பத்திற்கேற்ப வங்கிக்கணக்கை நடைமுறைப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம்.
- வியாபார நடவடிக்கைகளுக்காக மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வாய்ப்பு.

BOC

# தீபாவளி சிறப்பு மலர் – 2005


நாளுக்கு நாள் மாறும் நாகரீகத்திற்கேற்ற டிசைன்களில்
ஆடைகளைத் தெரிவு செய்வதற்கு ஏற்ற இடம்



**த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்**

நவீன சந்தை (வெளிப்புறம்) பெரியகடை, யாழ்ப்பாணம்.





அனைத்து வகைப் புடவைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள கைராசியான ஸ்தாபனம்

**சீமாட்டி புடவைக்கடல்**

சர்வதேச கடன் அட்டைகள் ஏற்கப்படும்.

கிளைகள்: மங்கை சில்க்ஸ்
(இல.15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்). மொடேர்ன் மாக்கற்
(இல.122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்).

T.P- 222 2196 Fax - 222 2102





**அனைவருக்கும் எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**
**அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்**

**சிறி மீனாட்சி தங்கமாளிகை**

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P- 222 6109





அனைவருக்கும் எமது இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

*பக்ஸ்
*தொலைபேசி
*இன்ரநெற் வசதி
*போட்டோக் கொப்பி

**RAINBOW LINKS**

- வீடியோ, ஓடியோ பாடல் பதிவுகள்.
- சீடிக்களை பிரதி செய்து அல்லது புதிதாக பதிவுசெய்து பெற்றுக் கொள்ளவும்.
- வீடியோ கசற்றுக்களில் பதிவு செய்யப்பட்ட உங்கள் வீட்டு வைபவங் களை சீடிக்களில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
- வீடியோ கசற்றுக்களில் பழுதடைந்த பகுதிகளை நீக்கி புதிதாக பாடல் களை பதிவு செய்து மெருகூட்டி பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு கொள்ளுங்கள்

**ரெயின்போ லிங்ஸ்**



208, முதலாம் குறுக்குத்தெரு,
ஆஸ்பத்திரி வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 3170



அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
100கிராம் ஜீவாகாரத்தில் 16.5 கி புரதமும், 400 கி கலோரி
சக்தியுமுள்ளது. **அண்ணா தயாரிப்பு**

**ஜீவாகாரம்**

போஷாக்குக் குறைவு, வளரும்
குழந்தைகளுக்கும், கர்ப்பிணித்
தாய்மாருக்கும் சிறந்த
போஷாக்குமிக்க உணவு ஜீவாகாரம்.

நாளெல்லாம் புத்துணர்ச்சியுடன்
இருக்க அருந்துங்கள்

**அண்ணா கோப்பி**

மேலும் உங்கள் சமையலை இலகுவாக்கி விரைவாக உணவு
தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புக்கள்

| | | |
|---|---|---|
| *தோசை மா | *ஆட்டா மா | *சரக்குத் தூள் |
| *உழுந்து மா | *குரக்கன் மா | *துண்டு மிளகாய் |
| *வறுத்த உழுந்து மா | *கடலை மா | *மஞ்சள் தூள் |
| *சிவப்பு அரிசி மா | *கறி மிளகாய்த் தூள் | *மிளகுத் தூள் |
| *வெள்ளை அரிசி மா | *தனி மிளகாய்த் தூள் | *சீரகத் தூள் |

உங்கள் பற்களின் வெண்மைக்கும்,
உறுதிக்கும், பற்களை பளபளக்க
வைக்கும்
**அண்ணா பற்பொடி**

அகத்தின் அழகு முகத்திலல்ல.
உங்கள் கன்னத்தில் பார்க்க
இன்றே வாங்குங்கள்
**புளூம் ரெல்கம் பவுடர்**

உங்கள் ஆலயங்களிலும், இல்லங்களிலும்
நறுமணம் கமள அண்ணாவின் ஊதுபத்திகள்
ரோஸ் பத்தி, மதுரங்கா பத்தி, சுகந்தவல்லி
பத்தி, துர்க்கா பத்தி, இவை அனைத்தையும்
சுலபமாக இன்றே பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



ANNA INDUSTRY
INUVIL.

Manufactured & Marketed by
T.P - 021 222 3565



**உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22ct தங்க**
**நகைகளைப் பெற்றிட யாழ்.நகரில் சிறந்த ஸ்தாபனம்**



**சாரங்கா நகைமாடம்**

Saranga Nagai Madam
*Manufacturers of Gold Jewels*
157/1, Kasthuriar Road,
Jaffna.
T.P- 021 222 2480, 021 222 6972

**சாரங்கன் நகைமாடம்**

175/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 021 222 6059





அனைவருக்கும் தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
உறுதியும், உத்தரவாதமும் உள்ள
22 கரட் தங்க, வைர
நகைகளைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

**வி.எம்.கே ஜுவலர்ஸ்**



இல.105 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்:
கண்டி வீதி, சாவகச்சேரி.



அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

**எரிக்கணேஷ்**



- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கெள்ளவும்
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ் போட்டோ கிறேலென்ஸ் என்ப வற்றைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)

கிளை இல:- **எரிக்கணேஷ்** கிளை இல:-
91,கே.கே.எஸ்.வீதி 80,கே.கே.எஸ்.வீதி,
மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும் சுன்னாகம்.
T.P. 222 2486

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு-2005

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு
## குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்
(நேற்றைய தொடர்ச்சி...)

38. யா/க/4150 திருமதி. சின்னத்துரை கணேசலிங்கம்.
39. யா/க/4263 திரு. ஐயாத்துரை நடராஜா.
40. யா/க/4279 திருமதி. நாகரட்ணம் இராசநாயகம்.
41. யா/க/4413 திருமதி. மங்களேஸ்வரி புஸ்பநாதன்.
42. யா/க/4457 திரு. செவ்வந்திநாதன் கைலாசநாதன்.
43. யா/க/4517 திருமதி. சுசியேந்திராணி தெய்வலிங்கம்.
44. யா/க/5006 திரு. சின்னையா வீரசிங்கம்.
45. யா/க/5330 திரு. கந்தையா வயிரமுத்து.
46. யா/க/5446 திருமதி. தெய்வேந்திரராணி சின்னக்கண்டு.
47. யா/க/5473 திருமதி. பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்.
48. யா/க/5479 திரு. சுப்பிரமணியம் சிவசுப்பிரமணியம்.
49. யா/க/5490 திரு. செல்லத்துரை நவரத்தினசாமி.
50. யா/க/5515 திரு. இரத்தினம் குமாரானந்ததேவர்.
51. யா/க/5725 திரு. கந்தன் சிவபாலன்.
52. யா/க/5808 திருமதி. அரியதேவி தம்பிராசா.
53. யா/க/5812 திரு. சின்னத்தம்பி சிவலிங்கம்.
54. யா/க/5914 திருமதி. பரிமளாதேவி ராசேந்திரம்.
55. யா/க/5921 திருமதி. சறோஜினிதேவி தவராசா.
56. யா/க/6040 திரு. ஐயாத்துரை அழகதுரை.
57. யா/க/6084 திருமதி. கனகம்மா சின்னையா.
58. யா/க/6095 திரு. ஐயாத்துரை சுப்பிரமணியம்.
59. யா/க/6166 திரு. கதிர்காமக்குருக்கள் சதாசிவக்குருக்கள்.
60. யா/க/6223 திரு. சண்முகநாதன் நேசராசா.
61. யா/க/6230 திருமதி. தவமலர் அப்புத்துரை.
62. யா/க/6262 திருமதி. மங்களேஸ்வரி ஜெயக்குமார்.
63. யா/க/6275 திருமதி. காசுமலர் நல்லான்.
64. யா/க/6326 திருமதி. கௌரி செல்வராஜா.
65. யா/க/6328 திருமதி. செல்லம்மா கதிரன்.
66. யா/க/6338 திருமதி. மீனாட்சி வேலாயுதம்.
67. யா/க/6398 திருமதி. தேவி செல்லத்துரை.
68. யா/க/6608 திருமதி. கண்ணகை முருகேசு.
69. யா/க/6836 திரு. வேலாயுதம் முருகுப்பிள்ளை.
70. யா/க/6962 திருமதி. இந்திராதேவி சிவலோகநாதன்.
71. யா/க/7002 திருமதி. ரஜனி சந்திரலிங்கம்.
72. யா/க/7057 திரு. சுப்பிரமணியம் தங்கராசா.
73. யா/க/7121 திருமதி. இராணிமலர் சூரியஉதயன.
74. யா/க/7148 திருமதி. இராசம்மா சிவஞானம்.
75. யா/க/7267 திருமதி. இலட்சுமி சிதம்பரப்பிள்ளை.
76. யா/க/7283 திருமதி. இந்திராணி உதயரவிச்சந்திரன்.
77. யா/க/7404 திருமதி. இராசமணி சுந்தரம்.
78. யா/க/7549 திரு. மயில்வாகனம் சரவணபவன்.
79. யா/க/7632 திருமதி. அன்னலட்சுமி சிவானந்தன்.
80. யா/க/7674 திரு. சின்னையா யுகராஜா.
81. யா/க/7776 திருமதி. சின்னம்மா கந்தசாமி.
82. யா/க/7816 திரு. குட்டியன் சின்னத்துரை.

## கிளிநொச்சி மாவட்டம்
## மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

1. வ/கி/11 திரு. சுப்பிரமணியம் சின்னத்தம்பி.
2. வ/கி/28 திருமதி. பொன்னம்மா கோபாலபிள்ளை.
3. வ/கி/44 திருமதி. பூபதியம்மா ஆறுமுகம்.
4. வ/கி/53 திருமதி. நாகேஸ்வரி முத்தையா.
5. வ/கி/70 திருமதி. பொன்னம்மா தேவதாசன்.
6. வ/கி/109 திரு. கந்தையா தியாகராசா.
7. வ/கி/143 திருமதி. புவனேஸ்வரி முருகுப்பிள்ளை.
8. வ/கி/213 திரு. கணபதிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை.
9. வ/கி/221 திரு. ஆறுமுகம் இராமலிங்கம்.
10. வ/கி/251 திரு. கோவிந்தன் செல்வபதி.
11. வ/கி/265 திரு. ஐயம்பிள்ளை நடராசா.
12. வ/கி/286 திரு. கனகசிங்கம் யோகேஸ்வரன்.
13. வ/கி/295 திரு. சோமசுந்தரம் பாலசுந்தரம்.
14. வ/கி/306 திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை.
15. வ/கி/324 திரு. வேலுப்பிள்ளை மயில்வாகனம்.
16. வ/கி/367 திரு. நாகமணி அம்பலவாணர்.
17. வ/கி/382 திரு. மாணிக்கம் செல்லையா.
18. வ/கி/430 திரு. செல்லையா புஸ்பராசா.
19. வ/கி/443 திரு. பொன்னம்பலம் தங்கராசா.
20. வ/கி/450 திரு. நாகலிங்கம் சோதிநாதன்.
21. வ/கி/462 திரு. பொன்னையா கதிரேசு.
22. வ/கி/477 திருமதி. இரத்தினம் மார்க்கண்டு.
23. வ/கி/486 திருமதி. அன்னம்மா சின்னத்தம்பி.
24. வ/கி/487 திருமதி. லெட்சுமி பெருமாள்.
25. வ/கி/540 திரு. யோச் இம்மானுவேல்.
26. வ/கி/547 திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்.
27. வ/கி/552 திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம்.
28. வ/கி/554 திருமதி. சிவபாக்கியம் வரதராஜா.
29. வ/கி/556 திரு. சின்னப்பொடி கந்தசாமி.
30. வ/கி/573 திரு. கந்தையா ஆறுமுகம்.
31. வ/கி/604 திரு. மணிமுத்து சந்தானம்.
32. வ/கி/605 திரு. இராசையா குலசேகரம்.
33. வ/கி/621 திருமதி. சத்தியபாமா பத்மநாதன்.
34. வ/கி/657 திருமதி. சிவஞானம் நடராசா.
35. வ/கி/668 திருமதி. இலட்சுமி மார்க்கண்டு.
36. வ/கி/690 திரு. சின்னையா பெருச்சி.
37. வ/கி/699 திரு. நாகம்மா தேவதாசன்.
38. வ/கி/708 திரு. இராசசேகரம் இராசேந்திரம்.
39. வ/கி/723 திரு. சுப்பிரமணியம் தியாகலிங்கம்.
40. வ/கி/729 திரு. இரத்தினசபாபதி குணரட்ணம்.
41. வ/கி/742 திருமதி. நீலாயதாட்சி இராஜகதிர்வேல்.
42. வ/கி/751 திரு. சின்னத்தம்பி அருளம்பலம்.
43. வ/கி/765 திரு. இராமையா ஆறுமுகம்.
44. வ/கி/771 திரு. செல்லையா செகராசசேகரம்.
45. வ/கி/803 திருமதி. வள்ளியம்மை பொன்னம்பலம்.
46. வ/கி/828 திரு. ஐயாத்துரை மருதையினார்.
47. வ/கி/879 திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம்.
48. வ/கி/889 திரு. சுப்பையா பரமலிங்கம்.
49. வ/கி/908 திரு. கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்.
50. வ/கி/933 திருமதி. புவனேஸ்வரி நடராஜா.
51. வ/கி/944 திரு. இரத்தினசிங்கம். பூரணசற்குணலிங்கம்.
53. வ/கி/950 திரு. வைத்திலிங்கம் அம்பலவாணர்.
54. வ/கி/981 திருமதி. பரமேஸ்வரி இரத்தினசிங்கம்.
55. வ/கி/1006 திரு. குருநாதர் கந்தசாமி.
56. வ/கி/1040 திருமதி. எலிசா தேவசகாயம்.
57. வ/கி/1043 திரு. வேலன் செல்லத்துரை.
58. வ/கி/1072 திரு. சபாரத்தினம் செல்வரத்தினம்.
59. வ/கி/1078 திரு. பொன்னையா துரைராசாயோசேப்.
60. வ/கி/1108 திரு. சின்னட்டி செல்லன்.
61. வ/கி/1116 திரு. காசிநாதன் வேலாசிப்பிள்ளை.
62. வ/கி/1118 திரு. வள்ளிபுரம் துரைச்சாமி.
63. வ/கி/1151 திரு. சுப்பையா சுந்தரம்.
64. வ/கி/1169 திரு. வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்.
65. வ/கி/1177 திரு. கந்தர் சுப்பிரமணியம்.
66. வ/கி/1182 திரு. சிதம்பரி செல்லையா.
67. வ/கி/1183 திருமதி. அழகம்மா கனகசபாபதிகுருக்கள்.
68. வ/கி/1185 திரு. நாகமணி ஸ்ரீகாந்தன்.
69. வ/கி/1251 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்.
70. வ/கி/1264 திருமதி. சிவபாக்கியம் மயில்வாகனம்.
71. வ/கி/1268 திரு. காசிநாதர் வேலுப்பிள்ளை.
72. வ/கி/1280 திரு. பொன்னர் சின்னத்தம்பி.
73. வ/கி/1303 திரு. சிவகுரு சிவப்பிரகாசம்.
74. வ/கி/1331 திரு. காசிப்பிள்ளை மகாதேவன்.
75. வ/கி/1350 திரு. கனகசபை துரைராசா.
76. வ/கி/1443 திருமதி. நாகம்மா சண்முகநாதன்.
77. வ/கி/1480 திரு. வைத்தியநாதன் பரமநாதன்.
78. வ/கி/1493 திரு. வைத்திலிங்கம் தனிநாயகம்.
79. வ/கி/1508 திருமதி. இராசமணி சோமசுந்தரம்.
80. வ/கி/1513 திரு. காசிப்பிள்ளை பரஞ்சோதி.
81. வ/கி/1521 திரு. தம்பு சண்முகம்.
82. வ/கி/1538 திருமதி. பூரணம் சுந்தரம்பிள்ளை.
83. வ/கி/1556 திரு. சின்னத்தம்பி கைலாயபிள்ளை.
84. வ/கி/1564 திரு. ஆறுமுகம் கிருஷ்ணசாமி.
85. வ/கி/1565 திரு. சின்னத்துரை சிவஞானம்.
86. வ/கி/1566 திரு. பொன்னுத்துரை கந்தையா.
87. வ/கி/1579 திருமதி. செல்லம்மா இராசையா.
88. வ/கி/1580 திரு. ஞானியார் யோகலிங்கம்.
89. வ/கி/1606 திருமதி. காசியம்மா வெள்ளைச்சாமி.
90. வ/கி/1628 திரு. சுவாந்தகுருஸ் நசரேனு.
91. வ/கி/1631 திரு. கிருஷ்ணர் தெய்வேந்திரம்.
92. வ/கி/1632 திரு. முத்துச்சாமி சுப்பிரமணியம்.
93. வ/கி/1639 திரு. கதிரவேலு பாலசுந்தரம்.
94. வ/கி/1655 திரு. சின்னத்தம்பி சபாலிங்கம்.
95. வ/கி/1677 திரு. சபாபதி கந்தசாமி.
96. வ/கி/1690 திரு. மாணிக்கம் செல்வஜோதி.
97. வ/கி/1715 திரு. சின்னத்தம்பி இராசரெத்தினம்.
98. வ/கி/1732 திரு. பசுபதி நாகலிங்கம்.
99. வ/கி/1739 திரு. இராமநாதன் கோபால்.
100. வ/கி/1742 திரு. சங்கரப்பிள்ளை பொன்னையா.
101. வ/கி/1745 திரு. வயித்திலிங்கம் கதிரவேலு.
102. வ/கி/1749 திரு. கிருஷ்ணசாமி பொன்னம்பலம்.
103. வ/கி/1797 திரு. சின்னப்பு பொன்னம்பலம்.
104. வ/கி/1806 திருமதி. நாகரத்தினம் பஞ்சரத்தினவடிவேலாயுதம்.
105. வ/கி/1808 திருமதி. இராசேஸ்வரி வேலுப்பிள்ளை.
106. வ/கி/1812 திரு. வேலுப்பிள்ளை மகேசன்.
107. வ/கி/1843 திரு. வேதவனம் வேலுப்பிள்ளை.
108. வ/கி/1893 திரு. மெக்கேல் அருளானந்தம்.
109. வ/கி/1897 திரு. வல்லிபுரம் குமாரசாமி.
110. வ/கி/1917 திரு. நாகன் இராமச்சந்திரன்.
111. வ/கி/1919 திரு. மகாதேவா சுந்தர்ராசா.
112. வ/கி/1941 திரு. சின்னையா வீரசிங்கம்.
113. வ/கி/1963 திரு. கந்தையா சுந்தரலிங்கம்.
114. வ/கி/1973 திரு. நாகமணி சித்திரவடிவேல்.
115. வ/கி/2004 திரு. கனகரத்தினம் கனகசிங்கம்.
116. வ/கி/2012 திரு. இராமநாதர் தியாகராசா.
117. வ/கி/2064 திரு. நாகமணி நடராசா.
118. வ/கி/2100 திரு. ஐயாத்துரை ஆனந்தமூர்த்தி.
119. வ/கி/2102 திரு. பாலர் குலசிங்கம்.
120. வ/கி/2113 திரு. சின்னத்தம்பி பரமானந்தம்.
121. வ/கி/2188 திருமதி. அருந்ததி இரத்தினம்.
122. வ/கி/2190 திரு. இராயர் தனப்பிரகாசம்.
123. வ/கி/2198 திரு. ஐயம்பிள்ளை அருணாசலம்.
124. வ/கி/2217 திரு. சிற்றம்பலம் மகாலிங்கம்.
125. வ/கி/2218 திரு. சரவணமுத்து சின்னராசா.
126. வ/கி/2221 திரு. நாகலிங்கம் சபாரத்தினம்.
127. வ/கி/2271 திருமதி. வள்ளியம்மை பசுபதி.
128. வ/கி/2302 திருமதி. இராஜேஸ்வரி ஜெயதேவன்.
129. வ/கி/2310 திருமதி. அன்னப்பிள்ளை கார்த்திகேசு.
130. வ/கி/2312 திரு. அம்பலவாணர் தனிநாயகம்.
131. வ/கி/2331 திரு. கணபதி கந்தையா.
132. வ/கி/2334 திரு. சின்னன் முத்துக்குமாரு.
133. வ/கி/2347 திருமதி. பரஞ்சோதி சண்முகம்.
134. வ/கி/2359 திரு. நாகநாதர் பொன்னுத்துரை.
135. வ/கி/2366 திரு. அருணாசலம் ஆறுமுகம்.
136. வ/கி/2401 திரு. முருகேசு சுப்பிரமணியம்.
137. வ/கி/2410 திரு. முத்துக்குமாரு சச்சிதானந்தசிவம்.
138. வ/கி/2441 திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு.
139. வ/கி/2445 திரு. ஐயாத்துரை தில்லையம்பலம்.
140. வ/கி/2498 திரு. இராமையா பேரம்பலம்.
141. வ/கி/2508 திரு. முத்தர் இராசையா.
142. வ/கி/2513 திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பி.
143. வ/கி/2550 திரு. முத்துலிங்கம் இராமலிங்கம்.
144. வ/கி/2575 திருமதி. பரிமளம் சிவலிங்கம்.
145. வ/கி/2623 திரு. சின்னத்துரை பெரியதுரை.
146 வ/கி/2635 திரு. சரவணமுத்து சபாரட்ணம்.
147. வ/கி/2694 திருமதி. இரத்தினாம்பிகை செல்வநாயகம்.
148. வ/கி/2701 திரு. இராமநாதர் கந்தையா.
149. வ/கி/2710 திரு. செபஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம்.
150. வ/கி/2711 திரு. ஆழ்வாப்பிள்ளை செல்லையா.
151. வ/கி/2714 திருமதி. அமராவதி வினாசி.
152. வ/கி/2715 திருமதி. லீலாவதி ஜெகநாதன்.
153. வ/கி/2744 திரு. கனகசபை கோபாலபிள்ளை.
156. வ/கி/2782 திரு. செபஸ்தியாம்பிள்ளை மனோகரசீலன்.
157. வ/கி/2815 திரு. கந்தையா முருகேசு.
158. வ/கி/2831 திருமதி. சிவநாயகி முருகையா.
159. வ/கி/2888 திரு. பொன்னுச்சாமி பெருமாள்.
160. வ/கி/2954 திரு. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்.
161. வ/கி/2964 திரு. கதிர்காமு குணசேகரன்.
162. வ/கி/2973 திரு. நவரத்தினம் நல்லதம்பி.
163. வ/கி/2982 திரு. இளையதம்பி நடராசா.
164. வ/கி/2999 திரு. கந்தையா நடராசா.
165. வ/கி/3000 திரு. தம்பையா மகேஸ்வரன்.
166. வ/கி/3032 திரு. செல்லத்துரை துரைராசா.
167. வ/கி/3055 திரு. பேதுறு அந்தோனிப்பிள்ளை.
168. வ/கி/3089 திரு. செல்லையா சச்சிதானந்தசிவம்.
169. வ/கி/3111 திரு. கந்தையா நவரத்தினம்.
170. வ/கி/3125 திருமதி. மேரிலிப்ரின் மகேஸ்வரராஸ்.
171. வ/கி/3144 திரு. கந்தையா கிருஷ்ணபிள்ளை.
172. வ/கி/3184 திரு. தாமோதிரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்.
173. வ/கி/3185 திரு. சீனுக்குட்டி சபாநாயகம்.
174. வ/கி/3209 திரு. கந்தையா நல்லதம்பி.
175. வ/கி/3214 திரு. தம்பையா நடராசா.
176. வ/கி/3216 திரு. வேலுப்பிள்ளை நமசிவாயம்.
177. வ/கி/3223 திரு. பொன்னையா சின்னத்தம்பி.
178. வ/கி/3273 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி.
179. வ/கி/3310 திரு. அப்பாத்துரை சுந்தரலிங்கம்.
180. வ/கி/3311 திருமதி. சற்குணம் பாலசுந்தரம்.
181. வ/கி/3323 திரு. கனகசேகரம் சுப்பிரமணியம்.
182. வ/கி/3326 திருமதி. சிவபாக்கியம் சண்முகம்.
183. வ/கி/3342 திரு. சின்னத்தம்பி நாகரத்தினம்.
184. வ/கி/3371 திரு. இளையகுட்டி பரராசசிங்கம்.
185. வ/கி/3374 திருமதி. நடேஸ்வரி யோசேப்.
186. வ/கி/3389 திரு. சுந்தரம் பாலையா.
187. வ/கி/3408 திரு. இராசையா வேலுப்பிள்ளை.
188. வ/கி/3433 திருமதி. சின்னத்தங்கம் இராமநாதபிள்ளை.
189. வ/கி/3464 திரு. சின்னத்துரை மருதப்பு.
190. வ/கி/3535 திரு. நடேசபெருமாள் கணேசரத்தினம்.
191. வ/கி/3540 திரு. காசிப்பிள்ளை சிவப்பிரகாசம்.
192. வ/கி/3582 திரு. வல்லிபுரம் இரத்தினம்.

## கிளிநொச்சி மாவட்டம்
## குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

1. வ/கி/19 திரு. காசிப்பிள்ளை வன்னியசிங்கம்.
2. வ/கி/83 திரு. கனகசபை பரராஜசிங்கம்.
3. வ/கி/95 திரு. சோமசுந்தரம் மயில்வாகனம்.
4. வ/கி/104 திரு. சின்னத்தம்பி வைத்திலிங்கம்.
5. வ/கி/145 திரு. சுப்பையா கிருஷ்ணபிள்ளை.
6. வ/கி/151 திரு. தில்லைக்கண்ணு குணராசா.
7. வ/கி/157 திரு. இராஜரெட்ணம் சிறிபாஸ்கரன்.
8. வ/கி/163 திரு. வேலுப்பிள்ளை இராமநாதன்.
9. வ/கி/170 திரு. சுப்பிரமணியம் விசுவலிங்கம்.
10. வ/கி191 திருமதி. ஜெயந்தாபத்மினி பரமேஸ்வரன்.
11. வ/கி/207 திருமதி. மங்கையற்கரசி பரமசாமி.
12. வ/கி/256 திரு. கந்தசாமி கனகேந்திரன்.
13. வ/கி/300 திரு. கயிலாயபிள்ளை யோகராசா.
14. வ/கி/329 திருமதி. மேரியோசேப்பின் பெனடிற்.
15. வ/கி/336 திரு. சின்னத்தமபி அரியதம்பி.
16. வ/கி/339 திரு. சண்முகம் சிறிஸ்கந்தராஜா.
17. வ/கி/407 திருமதி. கனகாம்பிகை விசுவலிங்கம்.
18. வ/கி/447 திரு. செல்லையா கேதீஸ்வரன்.
19. வ/கி/484 திருமதி. செல்லம்மா சிவஞானம்.
20. வ/கி/546 திரு. முத்துக்குமாரு சிவராசா.
21. வ/கி/549 திரு. செல்லைய்யா கந்தசாமி.
22. வ/கி/566 திரு. தில்லையம்பலம் வினாயகமூர்த்தி.
23. வ/கி/575 திரு. விஜயரட்ணம் சூரியகுமாரன்.
24. வ/கி/581 திரு. கந்தசாமி கோபாலசிங்கம்.
25. வ/கி/583 திரு. செல்லையா ஜெயராசா.
26. வ/கி/637 திருமதி. தங்கரத்தினம் நடேசு.
27. வ/கி/679 திரு. மயிலு தேவராசன்.
28. வ/கி/715 திருமதி. ஜெசிந்தாமேரி மோகன்.
29. வ/கி/760 திருமதி. சந்திரேஸ்வரி சண்முகராசா.
30. வ/கி/812 திரு. நாகலிங்கம் தயாபரராசா.
31. வ/கி/820 திரு. தங்கவேலு கிருஷ்ணமூர்த்தி.
32. வ/கி/845 திரு. கந்தையா தங்கராசா.
33. வ/கி/901 திரு. சண்முகம் அற்புதராஜா.
34. வ/கி/930 திருமதி. இராணிமலர் இரத்தினசிங்கம்.
35. வ/கி/961 திரு. தம்பையா தருமதுரை.
36. வ/கி/964 திரு. கார்த்திகேசு சுப்பிரமணியம்.
37. வ/கி/966 திரு. முருகேசு இராசதுரை.
38. வ/கி/1001 திரு. தியாகராசா சுதர்சன்.
39. வ/கி/1031 திரு. இராஜா ராஜசேகர்.
40. வ/கி/1081 திரு. வேலுப்பிள்ளை கனகசபை.
41. வ/கி/1093 திருமதி. பிரேமாவதி கிருஸ்ணநவரட்ணராஜா.
42. வ/கி/1094 திரு. கந்தையா மார்க்கண்டு.
43. வ/கி/1119 திரு. கந்தையா நடராசா.
44. வ/கி/1141 திரு. வீரகத்தி வல்லிபுரம்.
45. வ/கி/1173 திரு. கந்தையா பஞ்சாட்சரம்.
46. வ/கி/1175 திரு. சின்னையா சிவநேசன்.
47. வ/கி/1181 திருமதி. மகேஸ்வரி செல்வரத்தினம்.
48. வ/கி/1200 திரு. இராசையா ஸ்ரீசண்முகவரதன்.
49. வ/கி/1212 திரு. முருகர் செல்வராசா.
50. வ/கி/1244 திரு. சின்னக்குட்டி கிருஷ்ணகோபால்.
51. வ/கி/1262 திரு. சண்முகம் சின்னத்தம்பி.
52. வ/கி/1270 திரு. கணபதி ஆதிமூலம்.
53. வ/கி/1277 திரு. தம்பிஐயா சுந்தரலிங்கம்.
54. வ/கி/1304 திரு. குணரட்ணம் செல்வரத்தினம்.
55. வ/கி/1313 திருமதி. கோமதி விஸ்வலிங்கம்.
56. வ/கி/1317 திரு. சிவஞானசுந்தரம் திருக்கேதீஸ்பரன்.
57. வ/கி/1335 திரு. சிவகுரு திருநாவுக்கரசு.
58. வ/கி/1355 திரு. குமாரசாமி தவராசசிங்கம்.
59. வ/கி/1359 திரு. காசிப்பிள்ளை இராமலிங்கம்.
60. வ/கி/1374 திரு. ஏரம்பு நடராசா.

(தொடரும்)

# தீயவன் அழிந்த தீபாவளி

பூமாதேவியின் அம்சமான சத்தியபாமாவைக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணன் நரகாசுரனை வதம் செய்தார். அதன்பிறகு ஒருவருடம் கழித்து நரகாசுரனின் மகன் பகதத்தன் ஸ்ரீ கிருஷ்ணனைத் தனது நகரத்துக்கு அழைத்து வரவேற்று மகிழ்ந்தான். அப்போது பகதத்தன் நகரம் முழுவதும் தீபங்கள் ஏற்றி அலங் கரித்தான். அன்று முதல் தீபாவளி தொடங்கியது. இறைவனின் நாமங்களை வரிசைப் படுத்தி பாடுவதை நாமாவளி என்கிறோம். அதுபோல் தீபங்களை வரிசையாக ஏற்றும் திருநாள் தீபாவளி என்று ஆயிற்று.

நரகன் என்ற சொல்லே கொடிய பாவச்செயல்களைச் செய்யும் தீயவர்களைக் குறிக்கும். நரகன் ஒரு வனின் உயிருக்குப் பதிலாக நல்ல வன் ஒருவனின் உயிரை யான் எடுக்கமாட்டேன் என புகார் நகரில் இருந்த சதுக்கபூதம் கூறியதாக சிலப்பதிகாரம் சொல் கிறது. கொடிய நரகாசுரனை ஸ்ரீ கிருஷ்ணன் வதைத்து உலக மக்களை காப்பாற்றிய நாளை நரகாசுரனின் மகனே கொண்டாடினான்.

சத்தியபாமாவின் தியாக உள்ளம் தன் மகன் இறந்த சோகத்திலும் உலக மக்களின் நலனைப் பெரிதாக நினைத்தது.

அவளது வேண்டுகோளின் படியும் நரகாசுரனின் இறுதிக்கால விருப்பத்தின் படியும் நரக சதுர்த்தசி என்ற தீபாவளிப் பண்டிகை தோன்ற ஸ்ரீகிருஷ்ணன் வரம் கொடுத்தருளினார். திருமால் வராக அவதாரமெடுத்து நீரில் மூழ்கிய பூமியை மேலே கொண்டுவந்தார். அந்த அவதாரத்தில் அவர் பூமா தேவியை மணந்து ஒரு மகளைப் பெற்றார். அவனே நரகாசுரன். உலகத்தை ஆள்பவனின் மகனே தவறு செய்தாலும் அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்த திருமால் தானே கிருஷ்ணாவதாரக் காலத்தில் நரகாசுரனை வதம் செய்தார். திருமாலின் காத்தல் தொழிலுக்கு பூமாதேவியான சத்தியபாமாவும் உடனிருந்து உதவினாள். தீபாவளி பற்றி பல விதமாக பல்வேறு நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

ஸ்ரீராமன் இராவணனை வென்று வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்பி முடி சூட்டிக்கொண்ட நாளே தீபாவளி என்றும் கூறப்படுகின்றது. பகீரதனின் முன்னோர்களைக் கடைத்தேற்றுவதற்காகவும் பூமிக்கு வளத்தைக் கொடுப்பதற்காகவும் கங்கை பூமிக்கு இறங்கிவந்த நாள்தான் தீபாவளி என்று ஒரு கருத்தும் வட இந்தியாவில் வழங்கிவருகிறது. சதுர்த்தசி இரவு சிவ வழிபாட்டிற்கே உரியது. மாதசிவராத்திரியும் மகா சிவராத் திரியும் சதுர்த்தசி நாளிலேதான் வருகின்றன. தனக்கே உகந்த உயரிய சதுர்த்தசி நாளில் சிவபெருமான் கங்கையைப் பூமிக்குத் தந்தருளினார்.

கங்கை பகீரதனின் முன்னோர்களை முக்திக்கு அனுப்பியதோடு பூமியில் பிரவாகித்து வளத்தை அருளினான்.

அந்த கங்காதேவிக்கும் அவளை அனுப்பிய சிவபெருமானுக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் தீபாவளி வழங்கப்படுகிறது. தீபாவளி ஆயிற்றா? என்பதைவிட கங்காஸ்நானம் ஆயிற்றா? என்று கேட்கும் வழக்கமே அதிகமாக வழக்கில் இருக்கிறது. தீபாவளியன்று காசியில் கங்காஸ் நானம் செய்து காசி விஸ்வ நாதரையும் தங்க அன்னபூரணியையும் தரிசிப்பது மிகவும் விசேஷம்.

தீபாவளியை இடத்துக்கு இடம் பலவிதமாகக் கொண்டாடுகின்றனர். அதில் சில குஜராத்தில் குபேர பூஜையாகவும் மகாராஷ்டிரத்தில் மகாபலிக்கும் லட்சுமிக்கும் சிறப்பு பூசையாகவும் வங்காளத்தில் தாம் பூல திருவிழாவாகவும் துர்க்கா பூஜையாகவும் உத்திர பிரதேசத்தில் அன்னைபூரணி வழிபாடும் கங்காஸ்நானமும் தமிழகத்தில் தீபாவளி பட்சணங்களுடன் தீபாவளி லேகியம் என்ற மருந்தையும் உட்கொள்ளும் முறை தமிழகத்தின் தனிச்சிறப்பு எனலாம்.

ஈழத்தில் திருமால் தலங்களில் நரகாசுரன் போர் சிறப்பாக நடைபெறுவதுடன் காலையில் பக்தர்கட்கு தோசையையும் வழங்கும் வழக்க மும் உள்ளது.

ஈசனின் உடலில் பாதியை அடைய கௌரி திருக்கேதாரத்தில் தவம் இயற்றினார். சிவபெருமான் தனக்கே உரிய சதுர்த்தசியில் சக்திக்குத் தன் பாதியுடல் தந்து அர்த்தநாரீசுவரன் ஆனான். எனவே தீபாவளி நாளன்று பெண்கள் கணவனுடன் இணைபிரியாத இன்ப வாழ்வு வேண்டி கேதார கௌரி விரதம் மேற் கொள்கிறார்கள்.

அப்போது அம்மியையும் குழவியையும் சிவ சக்தியாகப் பாவித்து பூஜைகள் செய்கின்றனர். இடத்துக்கு இடம் ஏனைய பண்டிகை போலவே தீபாவளியும் இறை உணர்வையும் பக்தி உணர்வையும் மையமாகக் கொண்டுள்ளது என்பதை எண்ணி நல்வாழ்வு வாழ்வோமாக. ▯

**சரசாலை**
**க.சிவசங்கரநாதன்**

# நரகனை வதைத்த நன்னாள்

பாரதத்தில் இமயம் தொட்டுக் குமரிமுனை வரையிலும் உள்ள பிரதேசங்களிலும் இலங்கை முதலிய இந்துப் பண்பாடு பரவியுள்ள பிரதே சங்களிலும் சிறப்பாக கொண்டாடப்படும் முதன்மையான பண்டிகையான 'தீபாவளி' தீமைகள் நலிந்து நன்மைகள் பெருகிய நாளாகும்.

இத் தீபாவளி பற்றி பலவாறாக பலரும் வரலாறு களையும் புராணங்களையும் எடுத்துரைப்பினும் நரகா சூரன் கதையையே அனைவரும் ஏற்றுப் போற்றுகின்றனர்.

ஹிரண்யாசுரன் என்பவன் பல இம்சைகளை செய்தபோது தேவர் கள் கருணைக்கடலாகிய திருமாலை வழிபாடாற்ற அப்பெருமான் வராக அவதாரம் எனப் போற்றப்படும் பன்றியுருவெடுத்து ஹிரண்யா சுரனை அழித்து பூமியை அவனிடமிருந்து மீட்டு நீருளிருந்து பூமியை வெளியே கொணர்ந்தார். அந்த சமயத்தில் பூமாதேவிக்கு நாரா யணராகிய திருமாலுக்கும் பிறந்த புதல்வனே நராகசுரன் ஆவான்.

அவன் பிரம்மாவை நோக்கித் தவமிருந்து பெரும் பலம் பெற்று உலகங்களை எல்லாம் தனது ஆளுகைக்குட்படுத்தி நரகப் பாதைக்கு ஆளாக்கினான். எனவே அவன் "நரகாசுரன்" எனப் பெற் றான்.

இந்திரனது வெண்கொற்றக் குடையையும் மேலும் பல செல்வங்களையும் அபகரித்து வந்து இந்தியாவில் உள்ள அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள "பிராக் ஜோதிஷபுரம்" எனும் ஊரை தலைநகராக்கி கொடுங் கோலோச்சினான்.

சில காலத்தின் பின் பரந்தாமன் "கிருஷ்ணாவதாரம்" எடுத்து பல திருவிளையாடல்களைப் புரிந்து வந்தான். பூதனையையும் கம்சனை யும் சிசுபாலனையும் சம்ஹரித்து தேவியர்களோடு கிருஷ்ணன் துவாரகையில் வீற்றிருந்த போது இந்திரன் நரகனது கொடுமைகளை எடுத்துரைத்து தம்மைக் காப்பாற்ற வேண்டினான்.

எனவே கண்ணபிரான் பூமிதேவியுடைய அவதாரமான சத்தியபாமா தேரோட்ட நரகனையழிக்கப் புறப்பட்டார். அவனது நகரது கோட்டைகளை துவம்சம் செய்து அசுர சேனைகளை முழுவதுமாக அழித்து இறுதியாக நரகாசுரனுடன் கடும் போர் செய்தார்.

முடிவிலே தீபாவளி மறுநாள் காலை நரகனை சங்கரா யுதத்தால் அழித்தார். அன்று உலகத்திற்கு விடிந்தது. பூமா தேவி வேண்டிக் கொண்டபடி தீபாவளியை பண்டிகையாகக் கொண்டாடும் படி கண்ணபி ரான் திருவருள் புரிந் தார். "இந்த தீபாவளியாகிய ஐப் பசி மாத அமாவாசை நாளில் எண்ணெயில் திருமகளாகிய லக்ஷ்மியும் வெந்நீரில் கங்கையும் வசிப்பார்கள்" என்றும் திருமால் திருவருள் புரிந்தார்.

எனவே தீபாவளி அன்று அதிகாலையில் எண்ணெய் வைத்து நீராடுதல் "கங்கா ஸ்நானத்திற்கு சமானமாகும்" எனவே தீபாவளியன்று காலை நீராடி புத்தாடையணிந்து இறைவனை தீபமேற்றி வழிபட இன்னல் நீங்கி நல்வாழ்வு பெருகும் என்பது திண்ணம்.

**நீர்வேலி**
**தி.மயூரகிரி சர்மா**

# தமிழர்களின் வாக்குரிமை மறுப்பை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து எதிர் வரும் 7ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தவுள்ளது.

நாடு முழுவதும் உள்ள தமது கட்சியினரை எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்புக்கு அழைத்து வருமாறு அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே தமிழர்களுக்கான வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டதைக் கண்டித்து சில சமூக அமைப்புகளின் சார்பில் எதிர்வரும் 3ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து வாக்களிக்க வரும் வாக்காளர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தடுக்கக்கூடாது என்றும் அப்படித் தடுக்கும் நடவடிக்கையானது தனித் தமிழீழத்தை அங்கீகரிப்பது போலாகிவிடும். அவர்கள் சுதந்திரக் கட்சியை எதிர்த்து வாக்களிக்க நேரிடும் என்று தனது கட்சியினருக்கு சு.க.தலைவர் சந்திரிகா குமாரதுங்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த வாரத்தில் உயர் நீதிமன்றில் தமிழர் தாயகப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த தடைவிதிக்கக்கோரி 2 ஜனாதிபதி வேட்பாளர்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-4)

# தீபத்திருநாள் சிறப்புக் கவிதைகள்

## தீர்வுகொண்டு தீபாவளியே வருக!

தேசத்தின் இருளகற்றும் தீபாவளியே வருக
தேடுகின்ற தீர்வுகொண்டு தீபாவளியே வருக
நாசத்தை ஒழித்த திருநாளே தீபாவளியே வருக
நன்மைகளை மண்ணில் விளைத்திட தீபாவளியே வருக
வேஷத்தை களைந்திடும் தீபாவளியே வருக
வேண்டிடும் விடிவதனை தந்திட தீபாவளியே வருக
தீயன ஒழித்திடும் திருநாளே தீபாவளியே வருக
தீர்வுகொண்டு எம் தேசத்தை வாழ்விக்க தீபாவளியே வருக!

மதுரகவி

## ஒளியூட்டும் தீபாவளி

திக்கெட்டும் ஒளியூட்டும் தீபாவளி நாளில்
விக்கினங்கள் தீர்த்து விளக் (கு) கிடுவாய்-அக்கினியாய்
அல்லல் அறுத்தென்றும் அறம்வளர்க்கும் பாதையிலே
நல்லவையே செய்வாய் நயந்து

கருமையெனு மிருளை காசினியிலே யிருந்து
பெருமையுடனே யழித்த பேராண்மை - அருமைமிகு
இன்பத் திருநாளில் இதயமலர்பூக்க
அன்பு அருள் சுரக்கட்டும்

சாவையம்பதி கே.மகேஸ்வரி

## இதய தீபங்கள் ஒளிரட்டும்

தீபங்கள் ஏற்றுமித் தீபத் திருநாளில்
கோப வெடிகளைக் கொளுத்திடுவோம்
பாவம் செய்த பாவிகளாய் மாறாமல்
போகங்கள் குறைத்து வாழ்ந்திடுவோம்
யாகங்கள் செய்து இயமப் பயமொழித்து
மோகங்கள் நீக்கி
யோகங்கள் பெற்றிடுவோம்

மட்டுவில் க.சி.சதாசிவம்

## உள்ளம் ஒளிபெற ஏற்றுங்கடி!

ஏற்றுங்கடி தீபம் ஏற்றுங்கடி - பாரில்
ஏழ்மை ஒழிந்திட ஏற்றுங்கடி
சீற்றம் சிதைந்திட ஏற்றுங்கடி -நாட்டில்
சிறுமை ஒழிந்திட ஏற்றுங்கடி!

உள்ளம் ஒளிபெற ஏற்றுங்கடி - என்றும்
உரிமை உரம்பெற ஏற்றுங்கடி
கள்ளம் கரைந்திட ஏற்றுங்கடி - தீபம்
கருமை கரைந்திட ஏற்றுங்கடி!

வித்தை சிறந்திட ஏற்றுங்கடி - அதில்
விவேகம் கிளர்ந்திட ஏற்றுங்கடி
பச்சை கொழித்திட ஏற்றுங்கடி - நாட்டின்
பண்பு நிலைபெற ஏற்றுங்கடி!

தீபாவளித் தீபம் ஏற்றுங்கடி - வாழ்வில்
திண்மை திகழ்ந்திட ஏற்றுங்கடி
மாபாத கங்கள் மாண்டொழிந்து - மண்ணில்
மகிழ்ச்சி மலர்ந்திட ஏற்றுங்கடி!

-கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

# ஆறுமுகநாவலர் குருபூசையை ஒட்டி பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126 ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது. பேச்சுப்போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவில் தரம் 6,7,8ஆம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் "நவலர் பிறந்திலரேல்" என்ற தலைப்பில் ஐந்து நிமிடமும், மத்திய பிரிவில் தரம் 9,10,11ஆம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 'நாவலர் சைவசமயவாதி' என்னும் தலைப்பில் 7 நிமிடமும், மேற்பிரிவில் தரம் 12,13ஆம் வகுப்பபைச் சேர்ந்த மாணவர்கள் "நாவலர் கல்விப்பணி" என்னும் தலைப்பில் பத்து நிமிடமும் உரையாற்ற வேண்டும்.

கட்டுரைப் போட்டி பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இப் போட்டி தரம் 12,13ஆம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாத்திரமே நடத்தப்படவுள்ளது. ஒரு மணித்தியாலம் கொண்ட இப் போட்டி நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்புள்ள தலைப்பு போட்டி நாளன்று வழங்கப்படும்.

மேலும் குறிப்பிட்ட பிரிவுகளில் முன்பு பங்குபற்றி பரிசுபெற்றவர்கள் இவ் வருடம் கலந்துகொள்ள முடியாது என்றும் ஒரு பிரிவில் ஒரு மாணவரே தோற்ற முடியும் எனவும் வெற்றி பெற்றவர்களுக்கு 24.11.2005 அன்று பரிசில்கள் வழங்கப்படும் என சைவ பரிபாலன சபையின் கௌரவ தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

(அ-19)

# சச்சின் 32

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

ஆனால் மீதமிருக்கிற மூன்று விக்கெற்களையும் இந்தியர்களால் அத்தனை சுலபத்தில் எடுக்க முடியவில்லை. தென் ஆபிரிக்க பேட்ஸ்மேன் மேக்மில்லனும் விக்கெட் கீப்பர் ரிச்சர்ட்ஸனும் நிதானமாக ஆடி எட்டாவது விக்கெற்றுக்கு நாற்பத்தைந்து ரன்கள் சேர்த்தார்கள். வெற்றிக்கு இன்னும் ஏழே ரன்கள் தேவை என்னும் வலுவான நிலையில் தென் ஆப்பிரிக்க அணி இருந்தபோது, ரிச்சர்ட்ஸன் ரன் அவுட் ஆனார்!



நாற்பத்தொன் பதாவது ஓவரின் இறுதியில் தென் ஆப்பிரிக்காவின் ஸ்கோர், 8விக் கெற்கள். ஒரு முனையில் மேக்மில்லன் 46 ரன்களுடன் வலுவாக இருக்கி றார் இழப்புக்கு 190 ரன் மீதமிருப்பது ஆறே பந்துகள். வெற்றிக்கும் ஆறே ரன்கள் வாழ்வா சாவா என்று தீமானிக்கப் போகும் முக்கிய மான கடைசி ஓவரை யாரிடம் கொடுப்பது?

முன்னணி பவுலர்களான கபில் தேவ், பிரபாகர், ஸ்ரீநாத், மூவருக்கும் தலா இரண்டு ஓவர்கள் மீதமிருந்தது. இவர்களில் ஒருவருக்குத்தான் கடைசி ஓவர் என்று ரசிகர்கள் பரபரப்போடு காத்திருக்க அநேகமாக அந்த வாய்ப்பு, அனுபவமிக்க கபில் தேவுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அணியின் முக்கிய வீர்கள் எல்லோரும் பந்துவீச்சு முனையில் கும்பலாகக் கூடி நிற்க வெள்ளைப் பந்தைக் கையில் உருட்டியபடி தீவிரமான யோசனையில் இருந்தார். அஸாருதீன். கபில் தேவிடமோ பிரபாகரிடமோ, ஸ்ரீநாத்திடமோ முழு நம்பிக்கையோடு பந்தைக் கொடுக்க அவரால் முடியவில்லை இந்த முடிவில், தான் ஒரு சிறிய தவறு செய்துவிட்டாலும் இந்தியா இறுதிப் போட்டிக்குத் தேர்வாகாமல் ஹீரோ கோப்பையை இழக்க வேண்டியதுதான் இதை யோசித்த பிறகு அஸாரின் குழப்பமும் படபடப்பும் இன்னும் அதிகமாகியது.

அப்போதுதான் உதவி கேப்டன் சச்சின் தானாக முன் வந்து அஸார் கையில் இருந்த பந்தை வாங்கிக்கொண்டார் இந்த ஓவரை என் னிடம் கொடுத்துப் பாருங்கள் என்று சொல்லாமல் சொல்வதுபோல் இருந்தது. அந்தச் செய்கை. கண்களில் அசாத்திய துணிவு, எல்லோரும் பயந்து பின் வாங்குகிற சூழலிலும் என்னால் முடியும் என்கிற நம்பிக்கை!

சச்சினின் பந்துவீச்சை ஒழுங்கானது என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் பேட்ஸ் மேனை ஏமாற்றும் சில சமயங்களில் லட்டுபோல் மட்டையின் மையத்துக்கே சென்று சிக் ஸருக்குப் பறந்துவிடும் ஆகவே இந்தக் கடைசி ஓவரை சச்சினிடம் தந்தால் அது ஒருவிதமான சூதாட் டமாகத்தான் இருக்கும். தலைமுடியைக் கட்டி மலையை இழப்பதுபோல மலை வந்தாலும் வரலாம்!

ஆபத்தும்-அறிவுப்பூர்வமும் சமவிகிதத்தில் கலந்த அந்த யோசனையைச் சொன்னது சச்சின் தான் என்றாலும் அதற்கு அஸாருதீனை ஒப்புக்கொள்ளச் செய்தது சச்சினின் மேல் அவர் கொண்டிருந்த அதீத நம்பிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஐம்பதாவது ஓவரை வீசுவதற்கு சச்சின் தயாராக, இந்திய ரசிகர்களும் அணி வீரர்களும்கூட பதற்றத்துடன் நகம் கடிக்கலானார்கள்.

சச்சினின் முதல் பந்தைச் சந்தித்தமேக்மில்லன் சுலபமாக ஒரு ரன் எடுத்தார். அடுத்த பந்தையும் அவரே விளையாட விரும்பி அவர் இரண்டாவது ரன்னும் ஓடமுயலும் போது எல் லைக் கோட்டின் அருகிலிருந்து சலீல் அங்கோலா வீசிய பந்து மறுமுனை ஸ்டம்பைத் தகர்த் தது. மேக்மில்லனுடன் விளையாடிய டிவில்லியர்ஸ் ரன் அவுட்!

அஸாரும் சச்சினும் விரும்பிய திருப்புமுனை முதல் பந்திலேயே கிடைத்துவிட்டது. ஒரு ரன் போனாலும் பரவாயில்லை நன்கு விளையாடத் தெரிந்த மேக்மில்லனை மறுமுனைக்கு அனுப்பியாகிவிட்டது. இந்த சந்தோஷத்தோடு இலவச இணைப்பாக ஒரு விக்கெட்!



புததாக பேட் செய்ய வந்த ஆலன் டொனால்ட், சச்சினின் இரண்டாவது பந்தை சந்திக்கத் திணறினார். ரன்கள் இல்லை மூன்றாவது பந்தும் அவ்வாறே இப்போது மீதமிருப்பது மூன்றே பந்துகள் வெற்றிக்கு இன்னும்ஐந்து ரன்கள்மறுமுனையிலிருந்து மேக்மில்லன் யாரோ அவரைக் கட்டிப்போட்டுவிட்டது போல்கைகளைப் பிசைந்து கொண்டிருந்தார். டொனால்ட் ஒரு ரன் எடுத்தால் தான் மேக் மல்லன் மீண்டும் பேட் செய்ய முடியும் சச்சினின் நான்காவது பந்தும் டொனால்ட்டை ஏமாற்றி விட்டது. இரண்டே பந்துகள், 5 ரன்கள்! ஒரு வழியாக 5ஆவது பந்தை அடித்து ஆடிய டொனால்ட், ஒரு ரன் எடுக்க, கடைசிப்பந்தை சந்தித்த மேக்மில்டனுக்கு அதில் நான்கு ரன்கள் அடித்தே தீரவேண்டிய நிலைமை, ஒரேயொரு பந்து பவுண்டரி! பந்து வீச்சாளர், சச்சின் விக்கெற் கீப்பர் விஜயர் யாதவ் இருவரைத் தவிர எல்லா இந்திய ஃபீல்டர்களும் எல்லைக்கோடுகளைத் காக்க மீதமிருக்கும் ஓடினார்கள். ஒரே ஒரு பவுண்டரியைத்தடுத்து விட்டால் போதும் என்கிற நிலைமையில் அரங்கில் இருந்தவர்களும் டீவியில் நேரடி ஒலி பரப்பாக பார்த்துக்கொண்டிருந்தவர்களும் துடிக்க மறந்த இயத்தோடு இருக்கை நுனிக்கு நகர, சச்சினின் கடைசிப் பந்து... அதைச் சரியாக சந்திக்காத மேல்மில்லனால், பக்கத்திலேயே தட்டி விட்டு ஒரு ரன்மட்டுமே எடுக்க முடிந்தது. 50ஆவது ஓவர் இறுதியில் தென் ஆப்பிரிக்காவின் ஸ்கோர் எட்டு விக்கெற் இழப்பிற்கு 193 இந்தியாவுக்கு இரண்டு ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி! சச்சினின் அந்தக் கடைசி ஓவரை இந்தியாவே திருவிழாவாகக் கொண்டாடியது. இப்போதும் சச்சினின் சாதனை பட்டியலில், அந்த ஓர் ஓவர் கம்பீரமாக சிரித்துக்கொண் டிருக்கிறது!

தென் ஆப்பிரிக்க அணி வெற்றி பெறுவதற்கு 6 ரன்கள் தேவை என்ற நிலைமையில் பந்து வீச வந்த சச்சின், அந்த ஓவரில் விட்டுக்கொடுத்தது 3 ரன்கள் மட்டுமே. இந்திய அணி தோற்று விட்டது என்றே எல்லோரும் முடிவு கட்டி விட்ட நிலையில், சச்சின் தன் மேல் கொண்ட நம்பிக்கைக்கும், அவரின் முயன்று பார்க்கத்துணிந்த அஸாருதீனின் தலைமைக்கும் நல்ல பலன் கிடைத்தது. தென் ஆப்பிரிக்காவை வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்த இந்தியா, அங்கு மேற்கிந்திய தீவுகள் அணியைத் தோற்கடித்து ஹீரோ கோப்பையையும் கைப்பற்றியது! ஹீரோ கோப்பையையும் தொடர்ந்து இலங்கை அணியுடனான டெஸ் மற்றும் ஒரு நாள் தொடர்கள் பின்னர் இந்திய அணி நியூஸிலாந்திற்கு பயணமாகி, அங்கே ஒரு டெஸ் போட்டி மட்டும் 4 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியது.

இந்தத் தொடரின் இரண்டாவது ஒரு நாள் போட்டி, மார்ச் 27ஆம் திகதி ஆக் லாந்து நகரில் ஏற்பாடாகி இருந்தது. ஆட்டம் வாங்கு வதற்கு சிலமணி நேரங்கள் முன் னால் திடீரென்று ஒரு பிரச்சினை. இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரர் நவ்ஜோத் சிங்சித்து, கழுத்து வலி காரணமாக போட் டியில் இருந்து விலகிக் கொண்டார்!

(தொடரும்)

## ஜாதிகஹெல உறுமய கட்சிக்குள் முரண்பாடு?

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஆதரவு தெரிவித்து நடைபெறும் ஒவ்வொரு கூடடத்திலும் ஜாதிகஹெல உறுமயவின் சார்பாக ஒரு பிரதிதன்னும கலந்துகொள்ளவேண்டும் என்று அதன் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பிரசாரக்கூட்டங்களில் ஜே.வி.பியினரும் கலந்துகொள்வதால் ஜாதிகஹெல உறுமயவின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளக்கூடாது என்ற நிலைப்பாட்டை கட்சியின் பாராளுமன்ற குழுவின தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

தனது நிலைப்பாட்டை கட்சி உதாசீனம் செய்யும் பட்சத்தில் தான் ஜாதிகஹெல உறுமவிலிருந்து விலகப்போவதாக அதன் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் அச்சுறுத்திவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அவர் மேலும கருத்துத்தெரிவிக்கையில்,

அரசியல் இருக்கும் வரை வதந்திகள தொடர்ந்தும் இருந்து கொண்டே இருக்கும். நான் கட்சியை விட்டு விலகவுள்ளதாகத் தற்போது ஒரு வதந்தி வெளியாகியுள்ளது. இந்த வதந்தியில் எந்த விதமான உண்மையும் இல்லை. அப்படியான ஒன்றை தமாஷாகக கூட நான் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்தார். (து-9)

### சுனாமி நிவாரணம் வழங்கப்படாததால்

## வடமராட்சி வர்த்தகர்கள் போராட்டத்தில் ஈடுபடமுடிவு

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இதுவரை எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படாததால் அப்பகுதி வர்த்தகர்கள் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சி வடக்குக் கரையோர வர்த்தகர்கள் அண்மையில சக்கோட்டை முன்பள்ளி மண்டபத்தில் ஒன்று கூடி தமக்கென சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அதன் தலைவராக ம. பிரேம் ஆனந்தனும், செயலாளராக க.சூரியகுமாரனும, பொருளாளராக கா.மதனரூபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கபபட்ட கரையோரவர்த்தகர்களுக்கு எவவித நிவாரணமோ உதவிகளோ அல்லது வங்கிக்கடன் வசதிகளையோ செய்து தரப் படவில்லை. இந்நிலையில் நாம் எமது வாழ்க்கையையோ தொழிலையோ மீள ஆரம்பிக்க முடியாத நிலையில உள்ளோம்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மகஜர் மூலம் எங்கள் நிலையை விளக்கமாக அனுப்பி வைத்து அவற்றுக்கு சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் போராடடம ஒன்றை நடத்துவதற்கு இச் சங்கத்தின் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை ஓரளவு நிறைவேற்றி யுள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-35)

## 300 கோடி ரூபா செலவில் புதுப்பிக்கப்படும் காலி சர்வதேச கிரிக்கெற் மைதானம்

சுனாமியினால் பெரிதும் சேதத்திற்குள்ளான காலி சார்வதேச கிரிக்கெற் மைதானம் தற்போது புனர் நிர்மானம் செய்யப்பட்டு வருகின்றது. இரவும் பகலும் கிரிக்கெற்போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக காலிமைதானம் நவீன வசதிகளுடன் புதிப்பிக்கப்பட்டு வருதாதக மைதானத்தின் பாதுகாப்பாளர் ஜெயனந்த வர்மவீர தெரிவித்தார்.

300கோடி ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டுவரும் இவ் மைதானதிற்குரென்சில் மன்றமும் இலங்கை கிரிக்கெற் சபையும் நிதியுதவி அளித்துவருகின்றன. புதிய மைதானத்தில் ஒரே நேரத்தில் 25 ஆயிரம் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்ககூடிய வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. தற்போது மைதானத்தின எல்லைச் சுவர்கள் அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றது. (து-19)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யாழ். பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற

| | |
|---|---|
| பேரம்பலம் பரந்தாமன் | B.A(Hons) |
| வீரசிங்கம் சிவாகரன் | B.SC |
| கந்தசாமி கடம்பவேள் | B.SC |
| சுலோஜினி கணபதிப்பிள்ளை | B.BA(Hons) |
| சிவாஜினி வீரசிங்கம் | B .A (Hons) |
| செல்வச்சந்திரன் ஜெயா | B.A (Hons) |
| ஆனந்தி சிவசம்பு | B.A (Hons) |

### இவர்களையும் 2005ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற

புண்ணியராசா ரிசாந்தினி -142 (யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை)

மகாலிங்கம் ரஜீ -138 (பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை)

ஆறுமுகதாசன் மயூரன் -143 (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கற்பகச்சோலை நன்மை விருத்திச் சங்கம்
கற்பகச்சோலை சனசமூக நிலையம்
கற்பகச்சோலை கிராம அபிவிருத்திச் சங்கம்
கற்பகச் சோலை மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்
கற்பகச்சோலை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்

(C/1812)

காலம் நம்மை விரைவில் ஏமாற்றிவிடும். நாம் காலம் தாழ்த்தாது கடமையைச் செய்யமுனைந்தால் நாம் காலத்தை வென்றுவிடலாம். -சுவாமி இராமதாசர்

வலம்புரி

# அசுரர்களுடன் சமாதானப் பேச்சை தேவர்கள் நடத்தாதது ஏன்?

இன்று தீபாவளித் திருநாள். நரகாசுரன் வதம் செய்யப்பட்ட நாள். மிகப்பெரும் கொடூரம் செய்த நரகாசுரனை காத்தற்கடவுளாகிய கண்ணபரமாத்மா வதம் செய்ததினால் மகிழ்வுற்ற தேவர்களும், மக்களும் ஒளிமயமான தமது வாழ்க்கை அமையவிருப்பதை பிரதிபலிப்பதாக இல்லங்கள் தோறும் தீபமேந்தி இறைவனை வழிபட்டனர் என்பது புராணம் கூறும்கதை.

இதனையே தீபாவளியைத் தொடர்ந்துவரும் சூரசங்காரமும் உணர்த்தி நிற்கின்றது. அறம் தவறி இம்சைபுரிந்த அசுரர்களுடன் தேவர்கள் சமரசம் செய்யமுற்பட்டனர். ஒற்றுமையாக வாழ்வோம் எனக் கூறினர். எனினும் அசுரர்கள் அதற்கு ஒத்துவரவில்லை.

அசுரர்களுடனான பேச்சுவார்த்தைகள் சரிவரவில்லை என்ற நிலையில் இருதரப்புக்கும் இணக்கமான இறைபரம்பொருளிடம் தேவர்கள் முறையிட்டனர்.

அசுரர்களுடன் பேச்சுநடத்தி அவர்களைப் பக்குவப்படுத்தும் முயற்சியில் சமாதான அனுசரணையாளரான பரம்பொருள் எடுத்தமுயற்சிகள் தோல்வியில் முடிந்தன. அதன் பின்னரே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

யுத்தத்தின் இடையில்கூட யுத்தநிறுத்த உடன்படிக்கை போன்ற சூழ்நிலையைத் தோற்றுவித்த பரம்பொருள், மீண்டும் சமாதானம் என்பதற்காக தனது விஸ்வருபத்தைக் காட்டுகின்றார்.

விஸ்வருபத்தைக் கண்ட மாத்திரத்தில் சாந்தமடைந்த அசுரன் மீண்டும் மமதைகொண்டு போர் தொடுக்கிறான். அதுவே இறுதிப் போராகி அசுரர்கள் அழிந்து சாந்தியும் சமாதானமும் ஏற்படுகிறது.

இவை புராணக் கதையாக இருந்தாலும் ஈழத் தமிழர்களின் வாழ்வியலோடு மிகப்பொருத்தமுடையன. தமது உரிமைக்காக அகிம்சைப் போராட்டங்களைத் தமிழ்மக்கள் நடத்தியபோதிலும், அதற்கு உரிய மதிப்பை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்படுத்தவில்லை.

இதனால் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் இடையில், ஓர் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டாலும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதிலேயே சிங்களப் பேரினவாதிகள் அக்கறைகொண்டுள்ளனர்.

இதனால் சமாதான அனுசரணையாளர்களான நோர்வேப் பிரதிநிதிகளை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்துச்செய்தல், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல் என்றவாறு யுத்தத்திற்கான ஏற்பாடுகளே நடைபெறுகின்றன.

ஆக, அசுரர்களுடனான சமாதானப் பேச்சுக்கள் எவ்வாறு சாத்தியமற்றுப்போனதோ அதே போன்றதுதான் ஈழத்தமிழர் பிரச்சினையும் என்று உணரலாம்.

# யார் ஜனாதிபதியாக தெரிவானாலும் அவருடன் அமெரிக்கா இணைந்து செயற்படத் தயார்

## ரிச்சர்ட் ஆர்மிடேஜ்

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெறுமா என்று அமெரிக்கா கவலை கொள்வதாக அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகள் குறித்து ஊடகம் ஒன்றுக்கு ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் 17ஆம்திகதி இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது,

அமெரிக்கா மற்றும் சர்வதேச சமூகத்தின் கவலையெல்லாம் இலங்கையின் தேர்தல் நியாயமாகவும் நீதியாகவும் நடைபெறுமா என்பதுதான். இலங்கையின்.ஜனாதிபதியாக யார் தேர்ந் தெடுக்கப்பட்டாலும் அவர்களுடன் அமெரிக்க அரசாங்கம் இணைந்துசெயற்படும்.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் இலங்கையுடன் கூட்டாட்சி முறையிலான அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் ஒப்புக்கொள்ளவேண்டும்.அவர்கள் வன்முறைகளைக் கைவிடவேண்டும். இலங்கை அரசாங்கத்துடனான அமைதிப் பேச்சுக்களை மீண்டும் விடுதலைப் புலிகள் நடாத்தவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் இணைந்து ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை உருவாக்க முன்வந்தமை குறிப்பிடத்தக்க நிகழ்வு.ஆனால் அந்த வாய்ப்பை இலங்கை அரசாங்கம் தவறவிட்டுவிட்டது. அதைச் செயற்படுத்தி இருந்தால் அது இலங்கை அரசாங்கத்தின் பாரிய சாதனையாக இருந்திருக்கும்.

எதிர்வரும் அமைதிப் பேச்சுக்களில் முஸ்லிம்களும் பங்கேற்கவுள்ளனர்.இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு அனைத்து இனமக்களும் ஏற்றுக்கொள்ளும் படியான இறுதித் தீர்வாக அமையும் என்பதை இது உறுதிப்படுத்துவதாக உள்ளது என ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் தெரிவித்தார். (த-4)

# மஹிந்த ராஜபக்ஷ நல்லவர்; வல்லவரல்லர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த வாக்குகளில் 80சதவீதமானவை என் செல்வாக்கால் கிடைத்தவையே. நான் வாக்காளர்களைக் கைவிடவில்லை. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே சமாதானத்தையும் செல்வச் செழிப்பையும் நாட்டிற்கு பெற்றுத் தரத் தக்கவர் என்பதை நான் மனதார நம்புவதால் அவருக்கே எனது ஆதரவைத் தெரிவித்துள்ளேன். நானின்றி ஹெல உறுமயவுக்கென்று ஒரு வாக்கு வங்கி கிடையாது இவ்வாறு உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்திருக்கிறார்.

ஹெல உறுமயவின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தம்மாலோக தேரர் சில தினங்களின் முன்னர் ராஜபக்ஷ நல்ல மனிதராயினும் சமாதானத்தை ஏற்படுத்தும் வல்லமை மிக்க ஆட்சித் தலைவராக கணிக்கப்படக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்கவே எனத் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரத்தின தேரர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இலங்கையின் இறைமையை ஹெல உறுமய பாதுகாக்கும் என்று நம்பிய மக்களை தம்மாலோக தேரர் ஏமாற்றிவிட்டார். இறைமையைப் பாதுகாக்க வல்லவர் மஹிந்த ராஜபக்ஷவே என தீர்மானித்தபின்னரே ஹெல உறுமய சுதந்திர முன்னணி வேட்பாளரை ஆதரிக்கத் தீர்மானித்தது. தம்மாலோக தேரர் அமைக்கப்படவுள்ள பௌத்த சாசன அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பதவியை குறிவைத்து நாட்டின் இறைமையை பலிகொடுத்துள்ளார்.தம்மாலோக தேரர் ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்கள் பற்றிய தனது நிலைப்பாட்டை தெரிவிக்கவேண்டும் என தெரிவித்தார். இதேவேளை அமைச்சர் மங்களசமரவீர தம்மாலோக தேரர் பற்றி கூறிய கருத்துக்கள் பௌத்த, தர்மத்தை இழிவுபடுத்துகிறது என பௌத்த குருமார்கள் தெரிவித்து வருகின்றனர். (து-6)

# சுதந்திரக் கட்சியை அடியோடு அழிக்க முயலும் ஜே.வி.பியின் கருவியாக செயற்படுகிறீர்களா?

## பெர்னாண்டோ புள்ளே மீது ஜனாதிபதி பாய்ச்சல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதமராக விமல்வீரவன்ஸ வருவதற்கு உத்தேசித்துள்ளார் என ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்த கருத்தினால் கடும் சீற்றமடைந்துள்ள ஜனாதிபதி அவ்வாறு தெரிவித்ததற்கான காரணம் எதுவென விளக்கமளிக்குமாறும் கோரியுள்ளார்.ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தமிழீழ பத்திரிகையொன்றிற்கு அளித்த செவ்வியின் போது அனுரா,மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பிரசாரம் செய்யாத காரணத்தால் பிரதமர் மஹிந்த ஜனாதிபதியாகியதும் பிரதமராக விமல் வீரவன்ஸ அல்லது மங்களசமரவீர நியமிக்கப்படுவார் எனத் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி சீற்றமடைந்து விளக்கம் கோரும் கடிதத்தை ஜெயராஜுக்கு அனுப்பியுள்ளார்.

ஜெயராஜின் கருத்துக்கள் முற்றிலும் கட்சி விதிகளுக்கு முரணானவை என்றும் அத்துடன் ராஜபக்ஷவுக்கு தேர்தலில் பாடுபடும் கூட்டத்தினர் சிலரால் சுதந்திரக் கட்சியின் தனித்தன்மை பாதிக்கப்படுவதாகவும் அனுரா பண்டாரநாயக்க ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்தே ஜனாதிபதி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு மேற்கண்டவாறு கடிதம் எழுதியுள்ளார்.

கட்சியின் முடிவுகளுக்கு மாறாக அவர் தற்போது நடந்துகொண்டுள்ளதாகவும் இதற்குமுன்னரும் கட்சிக்கு மாறாக பல தடவைகள் நடந்துகொண்டுள்ளதையும் சுட்டிக்காட்டுவதாகவும் இவரின் நடவடிக்கைகளினை அவதானிக்கும்போது சு.கட்சியை பல தடவைகள் அழிக்க முயன்ற ஜே.வி.பியின் கருவியாக செயற்படுகிறீர்களா? என்றும் ஜனாதிபதி அக்கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.அத்துடன் அவரின் அரசியல் வாழ்வை சுட்டிக்காட்டியதுடன் பண்டாரநாயக்கர்கள் அவருக்கு அளித்த அங்கீகாரத் தையும் குறிப்பிட்டுள்ளார். இதனால் கலவரமடைந்துள்ள ஜெயராஜ் தனது நிலைப்பாட்டையும் பண்டாரநாயக்கர்களுடான தனது திட்டமான ஆதரவினையும் தெளிவாகத் தெரிவிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (து-6)

# தீபாவளி கொடுக்கல் வாங்கல்கள்

(யாழ்ப்பாணம்)

தீபாவளித் தினமான இன்று யாழ்.பிரதேசத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள்யாவும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காக காலை 9.00மணி தொடக்கம் 1.00மணி வரை திறந்திருக்கும்.

இன்றைய தினம் கணக்குகளை புதிதாகத் திறப்பவர்களுக்கும் ஏற்கனவே உள்ள கணக்குகளுக்கும் ரூபா 25,000க்கு மேல் வைப்பிலிடும் பொழுது ஓர் பெறுமதிமிக்க அழகிய சுவர் மணிக்கூடு அன்பளிப்பாக வழங்கப்படும்.

அத்துடன் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் தீபாவளிக் கொண்டாட்டம் காலை 10.00மணியளவில் நடைபெறும்.

வாடிக்கையாளர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வங்கியில் கொடுக்கல் வாங்கல்களை செய்து பெறுமதிமிக்க அன்பளிப்பைப் பெற்றுகொள்ளுமாறு மக்கள்வங்கி,யாழ்.பிரதேச தலைமைக்காரியாலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (த)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



வேதாந்தம் என்பது வெறும் கேலிக் கூத்தோ வெட்டிப் பேச்சோ அல்ல. அது ஒவ்வொருவரும் அனுபவித்து அறியவேண்டிய ஒன்று.மனிதன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அவனது ஆன்மாவில் எல்லையற்ற சக்தியுள்ளது. அவன் அதை உணரும் திறத்தைப் பொறுத்தே அது வெளிப்படுகிறது.

சுவாமி விவேகானந்தர்

# யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழு முன் புத்தூர் கிழக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்

புத்தூர் கிழக்குப்பகுதி மக்கள் இராணுவத்துக்கு எதிராக கடந்த 29 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேளை இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து புத்தூர் கிழக்கைச் சேர்ந்த நூற்றிற்கும் மேற்பட்ட பொது மக்கள் நேற்று மாலை 3 மணியிலிருந்து சுமார் ஒரு மணி நேரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் பிராந் திய அலுவலகத் தின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், 'போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவே இராணுவத்திற்குச்சார்பாக நிற்காதே', 'இராணுவ பாலியல் வல்லுறவை உடன் நிறுத்துக' 'எமது நிலம் எமக்கு வேண்டும் உடன் இராணுவமே வெளியேறு' 'அப்பாவிப் பொதுமக்களின் உயிரைப் பறிக்காதே' 'மனித உரிமை அமைப்புக்களே இனியும் மௌனம் ஏன்?' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கிய வண்ணம் மறியல்போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் இறுதியில் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பதிகாரி றோகித பிரியதர் சனவிடம் கையளித்தனர். பின்னர் இலங்கை போர்நிறுத் தக் கண்காணிப்புகுழுவின் யாழ். மாவட்ட அதிகாரியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (ச-19)

# ரிஸ்விமீடின் கொலைக்கு கண்காணிப்புகுழு கண்டனம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிரிஸ்விமீடின்படுகொலைக்கு இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

அவரின் படுகொலையினை வன்மையாக கண்டிப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாக கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ஸ்ரோட்டியர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை கிட்டத்தட்ட190 படுகொலைகள் இடம்பெற்றுள் ளன. அரசியல் ரீதியில் நடாத்தப்படும் படுகொலைகள் என்று சந்தேகிக்கப்படுவதை மாத்திரம் நான் குறிப்பிடுகிறேன் எனத்தெரிவித்தார்.

இக் கொலைகளில் பெரும்பாலானவை கிழக்குப்பகுதியில் தான் நடைபெற்றுள்ளன.

அங்கு ஒரு திரைமறைவு நிழல் யுத்தம் நடைபெறுவது போல்தோன்றுகிறது. அதில் அனைத்து தரப்பினரும் சம்பந்தப்பட்டிருப்பதுபோலவே தோன்றுகின்றது என்றார்.

ஜனாதிபதித் தேர்தலினை நெருங்கி விட்டோம் என்பதினாலேயே நாங்கள் அறிக்கையொன்றினை வெளியிட்டோம்.

வன்முறைச் சம்பவங்கள் ஒத்துக்கொள்ளக்கூடும் ஒரு நிலைமைக்கு நாம் வந்துவிட்டோம் போல் தெரிகிறது. இந்நிலை யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை படிப்படியாக குலைப்பதுபோல் தெரிகிறது.

சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களிடையேயான உறவுகளும் மோசமடைந்து வருகின்றன. தத்தம் பகுதிகளில் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொறுப்பு இரு தரப்பினரிடையே தான் இருக்கிறது என்றார். (ச-4)

# ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு குழு தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயாநந்ததிஸநாயக்காவுடன் ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புகுழுவினர் நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

தேர்தல் திணைக்களத்தில் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு குழுவின் தலைவர் ஜோன்குஷ்நாஹன் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவர் ஜூலியன் வில்சன், தேர்தல் ஆய்வாளர் இடோயோ அரன்செட்டா ஆகியோர் தேர்தல் ஆணையாளரை முற்பகல் 11.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார். வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து இச்சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு குழுவினால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய சந்திப்பில் ஆக்கபூர்வமான பல விடயங்கள் விவாதிக்கப்பட்டன. வடக்கு கிழக்கில் தேர்தல் நிலைமைகள் குறித்து தயானந்த திஸநாயக்க தமது கவலைகளை வெளியிட்டார்.

எமது கண்காணிப்பு பணிகளில் தேர்தல் திணைக்களம் தலையிடா என்றும் தேர்தல் ஆணையத்தின் கவலைகளை கவனத்தில் எடுக்குமாறும் எம்மைக்கேட்டுக்கொண்டார் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# தோணியின் அதிரடி ஆட்டம்: 3வது போட்டியிலும் இந்தியா வெற்றி

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

மூன்றாவது ஒருநாள் போட்டி ஜெய்பூரில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் துடுப்பெடுத்தாட களம் இறங்கியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சங்ககார மிகவும் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை 298 ஆக உயர்த்தினார். இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 4விக்கெட் இழப்பிற்கு 298 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்ககார ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களையும் மஹறூப் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

299 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய இந்திய அணி, விக்கெட் காப்பாளர் தோணியின் அதிரடி ஆட்டத்தால் 46.1ஓவரில் 4விக்கெட் இழப்பிற்கு 303 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கையடைந்தது.

இதில் தோணி அதிரடியாக விளையாடி ஆட்டமிழக்காமல் 15 பவுண்டறிகளும் 10 சிக்சர்கள் அடங்கலாக 183 ஓட்டங்களைப் பெற்று ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (ச-4)

# ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி

இந்நாட்டில் வாழும் பலதரப்பட்ட சமூகங்களிடையே நட்புறவினை வலுப்படுத்தி பரஸ்பர நம்பிக்கையினை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் சமாதானம், வளமான வாழ்வு என்பவற்றை அடைவதாக இருத்தல்வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். எமது தேசத்திலும் உலகெங்கிலும் வாழும் இந்து மத பக்தர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

தீபத்திருநாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும்இச்சந்தர்ப்பத்தில் எமது நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களையும் நட்புறவுடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்காக உறுதி பூணுவோம் என ஜனாதிபதி தீபாவளிச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ச-4)

# கண்காணிப்புகுழு-எழிலன்...

எழிலனும் ,யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுசார்பில் ஓ.ஜே. ஜோன்ஸும் கலந்து கொண்டனர்.

சுமார் மூன்று மணிநேரம் இடம் பெற்ற இச் சந்திப்பில் வாகரைப்பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலுக்கு இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவிற்கு தொடர்பு இருப்பதாகவும் அவர்கள் தாக்குதலை நடாத்திவிட்டு இராணுவ முகாம்களுக்கே தப்பிச்சென்றுள்ளதாகவும் எழிலன், கண்காணிப்பு குழுவினருக்கு விளக்கம் அளித்தார்.

அதேவேளை புரிந்துணர்வு உடன்படிக்கையில் இராணுவத் தடைகள் அகற்றப்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்காக திறந்து விடப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கட்டைப்பறிச்சான் இராணுவத்தடை முகாம் வழியாக இரவு 7மணிக்கு பின்னர் பொதுமக்களின் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இராணுவக்கட்டுப்பாடு பகுதி மக்கள் தங்கள் அவசர மருத்துவ தேவைகளைக் கூட பெற முடியாத நிலை தற்போது உருவாகியுள்ளதாக எழிலன் சுட்டிக்காட்டினார். (ச-4)

# யாழ்ப்பாண பொலிஸ்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதே வேளை தாக்குதல் இடம்பெற்றதையடுத்து கந்தர் மடம் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட் டுள்ளது.

அங்கிருந்து கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. அவ்வீதியினூடான போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதம் அடைந்தன. இத்தாக்குதல் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

நீர்வைக் கந்தன் பாமாலை
இசைத்தட்டு வெளியீட்டு விழா

காலம்:01.11.2005. (இன்று செவ்வாய்க்கிழமை)
நேரம்:பி.ப.3.00 மணி
இடம் : மாதர் சங்க மண்டபம், நீர்வேலி தெற்கு.

தலைவர்
திரு.க.கோபிறாஜ் (மன்றத் தலைவர்)
பிரதம விருந்தினர்
செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன்
(உப அதிபர்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
கௌரவ விருந்தினர்
செல்வி பாக்கியலட்சுமி நடராஜா
(தலைவர், இசைத்துறை இராமநாதன் நுண்கலைப் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்
திரு.ச.லலீசன்
(ஆசிரியர்,புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)
திரு.ச.சண்முகப்பிரபா
(அரச அச்சக உத்தியோகத்தர்-கொழும்பு)
மதிப்பீட்டுரை
திரு.ந.விஜயசுந்தரம் (ஆசிரியர்)
வரவேற்புரை
நி.கஜன் (உப தலைவர்)
ஆசியுரை
சிவஸ்ரீ இராசேந்திர சுவாமிநாதக் குருக்கள்
வாழ்த்துரை: மன்றப்போசகர்
வெளியீட்டுரை:
திரு.சீ.சுரேந்திரன் (நிர்வாக சபை உறுப்பினர்)
முதற் பிரதி பெறுபவர்
திரு.ச.புவிச்சந்திரன் (உரிமையாளர் ,வினோ நகைப் பூங்கா யாழ்.)
கௌரவப் பிரதி பெறுபவர்
திரு.சு.உதயசங்கர் (சூரியா கட்டட அலங்காரப் பொருட்கள் விற்பனையாளரும், ஒப்பந்தகாரரும்)
நன்றியுரை.
திரு.இ.கஜேந்திரன் (உப செயலாளர்)
கவிஞர்கள்
'வாகீச கலாநிதி' அமரர் திரு.கி.வா.ஜெகந்நாதன்
கலாநிதி திரு.இ.முருகையன்
திரு.சோ.பத்மநாதன் (சோ.பா.)
செல்வி சீ.மகிந்தினி
பாடகர்கள்
திரு.S.G சாந்தன் ,திரு.ஜெயா, சுகுமார்,
சிவஸ்ரீ.சோ.உமாரமணக்குருக்கள், செல்வி ச.ஜகனி
இசையமைப்பு
இசைவாணர் கண்ணன்
ஒலிப்பதிவு
முரளி, ஸப்தமி ஒலிப்பதிவுக் கூடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இந்து இளைஞர் மன்றம்
நீர்வேலி
(இ-05)

அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின்
நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வெளிவரவுள்ளது.
கல்வி. மருத்துவம். உளவியல். சோதிடம்.
ஆன்மீகம். விஞ்ஞான ஆராய்ச்சிகள். வரலாறு.
பொருளியல். சமூகவியல். அரசியல். கவின்கலை
தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள்
இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.
துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள்,
மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை
எதிர்பார்க்கின்றோம்.
உங்கள் ஆக்கங்களை
பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்
நிறைவு விழாச் சபை, வலம்புரி










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தீபாவளி சிறப்பு மலர் – 2005

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்




# COOL AIR'S



## GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)

*தொலைத் தொடர்பு நிலையங்கள்
*வர்த்தக நிலையங்கள்
*கணனி நிறுவனங்கள்
*காட்சி அறைகள்
*வீடுகள்

ISO 9001
தரச் சான்றிதழ்
பெறப்பட்டது

## எமது சேவைகள்




பொருத்துதல் இலவசம்
மூன்று வருட உத்தரவாதம்
(Compressor 3 years, Body 1 year)
விற்பனைக்கு பிந்திய சேவை
மூன்று மாதத்திற்கு ஒருமுறை
H.F.Cவாயு பயிற்சி பெற்ற (U.N.E.P),
(N.O.U) United Nations Environment programme,
National Ozone Unit
தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள்
பரிசீலனை செய்யப்படும்.

## இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43,300/- |
| 12000 BTU | 53,300/- |
| 18000 BTU | 68,300/- |
| 24000 BTU | 88,300/- |

மேலதிக விபரங்களுக்கு: **COOL AIR'S**
இல. 151 1/4, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 738888 , 071 3080808

மேற்குறிப்பிட்ட விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## ராம்கோ சீமெந்து

SLS – 107 அங்கீகாரம் பெற்றது
ISO – 9002 தரம் பெற்றது
BSS – 12-1991 தரத்திற்கு அமைவானது
100 விதம் OPC சீமெந்து

# RAMCO CEMENT

ஆசியாவின் முதல்தர (No 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதனை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். குறைந்த விலையில் நிறைந்த பயனைப்பெற 100 வீதம் OPC சீமெந்தான ராம்கோ சீமெந்தினை உபயோகித்து முழுப்பயனைப் பெறுங்கள்!

இறக்குமதியாளர்:
## ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91, எஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 222 2350

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## வேணி நகை மாடம்





# Veneiy Jewellery

தங்கப் பவுண் நகை வியாபாரம்

MANUFACTURERS OF GOLD JEWELS

No:40, Kannathiddy Road,
(People Bank Opposite)
Jaffna.

இல. 40, கன்னாதிட்டி வீதி,
(மக்கள் வங்கி கிளை முன்பாக)
யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான
பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## ஜெகன் களஞ்சியம்

இல:285, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021- 222 5085

# தீபாவளி சிறப்பு மலர் – 2005


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



## கிருஷ்ணா அடைவு கடை

KRISHNA POWN BROKER

370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021-222 5046

370, K.K.S.Road, Jaffna

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



அசல் 22 கரட் தங்க நகைகளை கைதேர்ந்த
நுட்பவல்லுநர்களால் மனதைக் கவர்ந்த வடிவங்களில்
செய்து கொள்ள இன்றே நாடுங்கள்

## திருவருள் நகை மாடம்

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி. தொ.பே.இல: 0776181416

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உலக பிரசித்தி பெற்ற, இங்கிலாந்து தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட
12 வருட உத்தரவாதம் கொண்ட RALEIGH சைக்கிள் யாழ்.
ஏக விநியோகஸ்தர்கள். ஆண், பெண் இருபாலாருக்கும் உண்டு.

## வெங்கடேஸ்வரா



துவிச்சக்கரவண்டிகள்
அவற்றுக்கான
உதிரிப்பாகங்கள்
அனைத்தையும்
பெற்றிட நாடுங்கள்

இல: 125A, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## UNIT

எமது அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களுடன்

ஆம் நாங்கள் வழங்கும் கணனிகள் யாவும் பல பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டே வழங்கப்படுகிறது.

எப்படி இவ்வளவு ஆக்கங்கள் எங்களால் செயற்படுத்தப்படுகின்றது?

- (Electronics & Communication) சிறப்புத் தேர்ச்சி
- (Experience)
- Infosys, Satyam, pentafour, Aram Ltd. UNIT
- Microsoft, Intel, IBM, Compaq, Toshiba, Sun Micro systems (Java), Hp, Red Hat, Cisco & Linksys Hardware, Networking, Software
- consultant

P4 கணனிகள் 3 வருட உத்தரவாதத்துடன்

No Additional Charges for Warranty Claim

இது எங்கள் மொபைல் சர்வீஸ் சென்டருடன் இணைக்கப்பட்டது.

An Indian Qualified Engineers Workshop

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021-4590720 // 0773134737

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## மனோகரா திரையரங்கு



இளையதளபதி
விஜய் நடிக்கும்

சிவகாசி



யாழ்ப்பாணம்

ஆசனங்களை
முன்கூட்டியே
பதிவு செய்யவும்.

(சில தினங்கள் மட்டுமே 8.30
காட்சி காண்பிக்கப்படும்)

அஸின், ஸ்ரீகாந்தேவா,
நயன்தாரா, பிரகாஷ்ராஜ்
மற்றும் பலர்...

யாழ் நகரில் முதன் முறையாக
dts ஒலி நுட்பமுடன்

K.K.S. ROAD,
JAFFNA.

# தீபாவளி சிறப்பு மலர் – 2005


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஒரே கூரையின் கீழ் 1

## சிறி நதியா நகை மாளிகை

இல. 01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: சாறுயா / சிறி ருபா நகை மாளிகை

இல: 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## SARAGAS'S CENTRE
## சாரகாஸ் சென்ரர்

சகல விதமான இறைவட்டர் வகைகளும் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், சார்ஜர்லைற், றொல்ஸ்பிக், சமையலறை உபகரணங்கள், மின்விசிறி, ரோஸ்ரர், கேத்தல், மின்சாறுஓவன், றைஸ்குக்கர், மற்றும் அன்பளிப்புப் பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள சாரகாஸ் சென்ரறை நாடுங்கள்

இல: 780 K.K.S வீதி (சிவலிங்கப் புளியடி) யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## பிரகாஸ் போக்குவரத்து சேவை

கொழும்பு – கிளிநொச்சி – யாழ்ப்பாணம்

கொழும்பிலிருந்து பொருட்களை வடபகுதிக்கும், அங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொழும்பிற்கு பரிமாற்றம் செய்யவும்

கோழி மற்றும் விலங்கினங்களின் தரம் வாய்ந்த உணவுகளின் மொத்த விநியோகத்தர்கள்

பிரகாஸ் போக்குவரத்து சேவை

இல: 455, 457 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: No: 222 2145
Fax: 222 2958

இல: 221 டாம் வீதி, கொழும்பு – 12
T.P: No: 0112543310
0112543309



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## மகாநதி ஜுவல்லறி
## MAKANATHY JEWELLERY



Kasthuriar Road, Jaffna.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

66 வருட றைக்கிளின் சேவையின் முன்னோடிகளான

## சன்லைட் றைக்கிளினோஸ்

ஸ்தாபனத்தார்

1) மோட்டோ ஸ்ராம் பிரதிகள்
2) அடையாள அட்டை ஸ்ரிக்கர்களுக்கான அம்பலங்கள் கவரிடுதல் மற்றும்
3) தொலைபேசி சேவைகள்

ஆகிய இணைந்த சேவையினை வழங்குகின்றனர்

சன்லைட் றைக்கிளினோஸ்
23 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
கிளை: சுன்னாகம், யாழ்ப்பாணம்.

T.P: No: 3871, 8427, 9467, 2741, 9113

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## சொலெக்ஸ்

நல் மூக்குக் கண்ணாடி அகம்



* மிக நவீன றிம்லெஸ் (Rimless) கண்ணாடிகள் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோகுறே, போட்டோ பிறவுண், லென்ஸ் வகைகளையும், உங்கள் கண்களை இலவசமாக பரிசோதித்துக் கொள்ளவும்.
* பிழைப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப் போடவும், சொந்தப் பற்களுக்கு நிகரான செயற்கைப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்
* கண்ணாடி அணிய விருப்பமற்றவர்களுக்கு கண்மணிகளுடன் பொருந்தும் கொன்ரக் லென்ஸ் வகைகள் பல நிறங்களில் பெற்றுக் கொள்ளவும்
* கொன்ரக் லென்ஸ்களுக்கு பயன்படுத்தும் திரவ வகைகளும் பெற்றுக் கொள்ளலாம்.

கிளை: பிரதான வீதி, முதலாம் குறுக்குத்தெரு, நெல்லியடி.

516 ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.

T.P: No: 7631, 0777 286029

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## CLIPSAL SWITCHES
## கிளிப்சால் சுவிச் வகைகள்
## அபிராமி எலக்ரிக்கல்ஸ்

ஒரு வருட இடைவெளிக்கு பின்பு யாழ். மாவட்டத்தில் மீண்டும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரிஜினல் (கிளிப் சால்) CLIP SAL சுவிச் வகைகளுக்கு யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்

நிறுவனத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

மின்சாரப் பொருட்கள் விற்பனையாளர்கள்

T.P: No: 222 2489 62/34 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# தீபாவளி சிறப்பு மலர் – 2005



அனைவருக்கும் எமது உளம்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

காஸ், காஸ் செற்களையும், மோட்டார் சைக்கிள்களையும், உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## ஹரனி மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயர்

## HARANI MOTORS & HARDWARES

காஸ், காஸ் செற் விற்பனையாளர்

தொலைபேசி: 021 222 2850
தொலைநகல்: 021 222 2850

64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

* கட்டடப்பொருட்கள் *பெயின்ற் வகைகள்
போன்றவற்றை நிதான விலையில் ஓரிடமாக பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

## கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

CALTEX 2T ஒயிலுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

இல. 147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 2833

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## இதோ 171 ஸ்ரான்லி வீதியில்

உங்களது நன்மதிப்பும் பெற்ற
பிரிடம் எல்.எம்.எல்.ஸ்கூட்டர்
மோட்டார் சைக்கிள், விவசாய உபகரணங்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்



## S.P.N.MOTORS

## எஸ்.பீ.என். மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 7144

---

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## ஆ. வேலுப்பிள்ளை அன் சன்



73 வருட அனுபவமுள்ள
மதுபான
விற்பனை நிலையம்

243, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## BABY ANGLE PASSENGER SERVICE

இலங்கையில் எப்பாகத்திற்கும்
துரிதகதியில் பாதுகாப்பாக
தங்குமிட வசதிகளுடன்
சென்று வர தொடர்பு
கொள்ளுங்கள்.





லேலன் அரைச் சொகுசு NPJH - 9989
ரோஷா சொகுசு - 63 - 3076

NELLYAN
CHULIPURAM
T.P - 077 6176451

---

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள் !

புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள் T.V. டெக் வகைகள், றேடியோ வகைகள்
அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், அன்ரனா வகைகள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



## இ.ச.பேரம்பலம் சகோ நிறுவனம்

இல: 50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021- 222 2988,3096 Fax: 021-222 2368

E.S.PERAMPALAM AND CO
(PEPSI, MIRINDA, 7UP
போன்றவற்றிற்கான
ஏக விநியோகஸ்தர்கள்)